# க.பொ.த (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

## விஞ்ஞானம் I

ஒரு மணித்தியாலம்

**கவனிக்க வேண்டியது :**

(i) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

(ii) **1** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்ற விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

---

**1.** விலங்குக் கலத்தில் காணப்படாததும் தாவரக் கலத்தில் காணப்படுவதுமான அமைப்பு எது?
(1) கலமென்சவ்வு (2) மையப்புன்வெற்றிடம் (3) கரு (4) இழைமணி

**2.** கீழே தரப்பட்டுள்ள பதார்த்தங்களில் மூலகம் **அல்லாதது,**
(1) காபன் (2) இரும்பு (3) உருக்கு (4) சோடியம்

**3.** பின்வருவனவற்றுள் ஆர்முடுகலை அளக்கும் அலகு எது?
(1) $m^{-1} s$ (2) $m s^{-1}$ (3) $m^{-2} s$ (4) $m s^{-2}$

**4.** ஒளித்தொகுப்புச் செயன்முறையின் விளைவாக தாவர இலையில் முதலில் உற்பத்தி செய்யப்படுவது,
(1) குளுகோசாகும். (2) மாப்பொருளாகும். (3) புரதமாகும். (4) கொழுப்பாகும்.

**5.** ஐதரொட்சைட்டு ($OH^-$) அடங்கிய ஊடகத்தில் பினோப்தலின் காட்டும் நிறம்.
(1) இளஞ்சிவப்பாகும். (2) மஞ்சளாகும். (3) நீலமாகும். (4) ஊதாவாகும்.


**6.** எண்ணிக் கணியத்தை மட்டும் கொண்ட விடை யாது?
(1) வேலை, ஆர்முடுகல் (2) சக்தி, வலு (3) கதி, நிறை (4) இடப்பெயர்ச்சி, அமுக்கம்

**7.** உருவில் காட்டப்பட்டுள்ள வித்து பரம்பலடையும் முறை பின்வருவனவற்றுள் எது?



(1) விலங்கு மூலம் (2) நீர் மூலம்
(3) காற்று மூலம் (4) வெடித்தல் மூலம்

**8.** ஆய்வு கூடத்தில் மாணவனொருவனால் இரண்டு வாயுக்களைச் சேகரிப்பதற்காக அமைக்கப்பட்ட உபகரண அமைப்புக்களை உருவில காணலாம். இங்கு *X*, *Y* ஆகிய வாயுக்களாக இருக்கக் கூடியவை முறையே





(1) $H_2$ உம் $O_2$ உம் (2) $O_2$ உம் $CO_2$ உம் (3) $CO_2$ உம் $O_2$ உம் (4) $O_2$ உம் $H_2$ உம்

**9.** இசைக் கருவிகள் இரண்டினால் ஒரு சுரத்தினை இசைக்கும்போது இவ் இசைக் கருவிகளை இனங்காண உதவுவது
(1) பண்பு ஆகும். (2) உரப்பு ஆகும்.
(3) மீடிறன் ஆகும். (4) சுருதி ஆகும்.

**10.** சமநிலைப்படுத்தப்படாத விசை தொழிற்படும் சந்தர்ப்பமொன்று
(1) மேசையின் மீது பொருளொன்று ஓய்வில் காணப்படுதல்.
(2) நூலில் கட்டித் தொங்கவிடப்பட்ட பந்து ஓய்வில் இருத்தல்.
(3) மேல்நோக்கி எறியப்பட்ட பொருளொன்று மேல்நோக்கிச் செல்லுதல்.
(4) மோட்டார் வாகனமொன்று சீரான வேகத்துடன் நேர்கோட்டில் செல்லுதல்.

**11.** இரு சொற்பெயரீட்டு முறையில் மாமர இனமொன்றின் விஞ்ஞானப் பெயர் திருத்தமாக எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) MANGIFERA INDICA (2) *Mangifera Indica*
(3) mangifera Indica (4) *Mangifera indica*


• ஆவர்த்தன் அட்டவணையில் அடுத்துள்ள எட்டு மூலகங்களின் அயனாக்கச் சக்தி அணுவெண்ணுடன் மாறுபடுவதை வரைபு காட்டுகின்றது. வினா எண் **12, 13** ஆகியவை இவ்வரைபை அடிப்படையாகக் கொண்டவையாகும். (a, b, c, d, e, f, g, h என்பவை நியமக் குறியீடுகளல்ல.)




**12.** இம்மூலகங்களில் விழுமிய வாயு மூலகம் எது?
(1) a (2) c
(3) f (4) h

**13.** தரப்பட்டுள்ள மூலகங்களுள் மின்னெதிர்த்தன்மை கூடிய மூலகம் எது?
(1) b (2) d (3) e (4) g

**14.** ஐதான, அடர்த்தியான ஊடகங்கள் இரண்டினூடாக ஒளிக்கதிரொன்று செல்லும் முறையைக் காட்டும் சரியான உரு எது?





(1) (2) (3) (4)

**15.** வைரசினால் மட்டும் கடத்தப்படும் பாலியல் ரீதியான நோய் பின்வருவனவற்றுள் எது?.
(1) ஹேப்பிஸ், ஏயிட்ஸ் (2) ஹேப்பிஸ், சிபிலிஸ்
(3) கொனோரியா, சிபிலிஸ் (4) கொனோரியா, ஏயிட்ஸ்

**16.** ஸ்கேவி நோய் எவ்விற்றமின் குறைபாட்டினால் ஏற்படுகின்றது?
(1) விற்றமின் A (2) விற்றமின் B (3) விற்றமின் C (4) விற்றமின் D


**17.**




குவிவாடியின் முன்னால் தலைமையச்சில் நிமிர்ந்த நிலையிலமைந்த பொருளொன்று வைக்கப்பட்டுள்ளது. பொருளை ஆடியை நோக்கி அசைக்கும் போது விம்பமானது.
(1) சிறியதாகி ஆடியை நோக்கி அசையும்.
(2) பெரியதாகி ஆடியை நோக்கி அசையும்.
(3) சிறியதாகி ஆடியை விட்டு விலத்தி அசையும்.
(4) பெரியதாகி ஆடியை விட்டு விலத்தி அசையும்.

**18.** மனிதனின் பிறப்புரிமையியல்பு பரம்பரை பரம்பரையாகக் கடத்தப்படுவது,
(1) கொல்கியுடல் மூலம் (2) இழைமணி மூலம் (3) பரம்பரையலகு மூலம் (4) இரைபோசோம் மூலம்

**19.** வல்கனைசுப்படுத்தப்பட்ட இறப்பரில் மூலக்கூற்றுமட்ட அமைப்பை நன்றாக விளக்குவது பின்வருவனவற்றுள் எது?



(1) (2) (3) (4)

**20.** வெப்ப இடமாற்றம் நிகழ்ந்தமைக்கான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
(a) ஒரு முனை நெருப்பில் இடப்பட்ட இரும்புக் கோலின் மறு முனையில் சூட்டை உணரக் கூடியதாக இருத்தல்.
(b) மரத்தின் கீழ் நெருப்புக் குவியல் உள்ள போது மரத்தின் இலைகள் அசைதல்.
(c) கண்ணாடிகள் மூடப்பட்ட மோட்டார் வாகனமொன்று நெருப்புக் குவியலுக்கு அண்மித்து செல்லும்போது உள்ளே இருப்பவர்கள் சூட்டை உணர்தல்.

இங்கு நடைபெற்ற வெப்ப இடமாற்ற முறைகள் முறையே,
(1) கடத்தல், கதிர்ப்பு, மேற்காவுகை (2) மேற்காவுகை, கடத்தல், கதிர்ப்பு
(3) கதிர்ப்பு, மேற்காவுகை, கடத்தல், (4) கடத்தல், மேற்காவுகை, கதிர்ப்பு

[பக். 3 ஐப் பார்க்க.

**21.** வெண்குருதிசிறுதுணிக்கையின் இரண்டு வகைகளை உருவில் காணலாம்.



உரு *A*



உரு *B*


இங்கு A, B என்பவை முறையே
(1) இயோசிநாடி, நிணநீர்க்குழியம்.
(2) நடுநிலைநாடி, ஒற்றைக்குழியம்.
(3) ஒற்றைக்குழியம், நிணநீர்க்குழியம்.
(4) நடுநிலைநாடி, மூலநாடி

**22.** பல்வேறு உற்பத்திச் செயன்முறைகள் சிலவற்றுக்கான உதாரணங்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.

*A* - கறுவா எண்ணெய் பிரித்தெடுப்பு.
*B* - கடல் நீரிலிருந்து உப்பு உற்பத்தி.
*C* - சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி சிமெந்து தயாரித்தல்.

இங்கு கலவையின் கூறுகளை வேறுபடுத்துவதற்கான நுட்பங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் /சந்தர்ப்பங்கள்
(1) *A* மட்டும். (2) *B* மட்டும்.
(3) *A*, *B* மட்டும். (4) *A*, *C* மட்டும்.

**23.** சுற்றில் ஆளி *S* ஐ மூடும் போது (ON) சுற்றின் சமானத்தடை





(1) 6Ω (2) 4Ω
(3) 3Ω (4) 2Ω

**24.** வாய்க்குழியில் ஆரம்பித்து களம், இரைப்பை, முன்சிறு குடல் வரை உணவு செல்லும்போது உணவு சமிபாடு அடைவதற்கு ஒவ்வொரு இடங்களிலும் உள்ள ஊடகங்களின் pH இன் பெறுமானம் வேறுபடுகின்றது. வாய்க்குழியிலிருந்து pH வேறுபடும் சரியான ஒழுங்கு முறைகள்
(1) அமிலம், நடுநிலை, காரம், அமிலம் (2) நடுநிலை, நடுநிலை, அமிலம், காரம்
(3) காரம், நடுநிலை, அமிலம், நடுநிலை, (4) காரம், காரம், அமிலம், காரம்

**25.** $xAl + yHCl \longrightarrow zAlCl_3 + 3H_2$
மேற்படி இரசாயனத் தாக்கத்தில் *x*, *y*, *z* ஆகியவற்றின் பெறுமானம் பின்வருவனவற்றுள் எது?
(1) 2, 3, 6 (2) 2, 6, 3 (3) 3, 6, 2 (4) 2, 6, 2

**26.** உருவில் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளி *C* இல் தொங்கவிடப்பட்டுள்ள இலேசான கோல் சமநிலையில் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் *W* இன் பெறுமானம் யாது?






(1) 25 N (2) 50 N
(3) 75 N (4) 100 N


**27.** பேரிராச்சிய மட்டத்திற்கு ஏற்ப அங்கிகளை சரியாக வகைப்படுத்திக் காட்டுவது எது?
(1) பங்கசு, பிளான்ரே (தாவரம்), அனிமாலியா (விலங்கு) (2) பற்றீரியா, புரோடோசோவா, அல்கா
(3) இயூக்கரியா, ஆக்கியா, பற்றீரியா (4) பற்றீரியா, சயனோபற்றீரியா, பங்கசு


**28.** 80 g சோடியம் ஐதரொட்சைட்டு 360 g நீரில் கரைத்து கரைசல் தயாரிக்கப்பட்டது. இக்கரைசலில் சோடியம் ஐதரொட்சைட்டின் மூல் பின்னப் பெறுமானம் எவ்வளவு? (Na = 23, O = 16, H = 1)
(1) $\frac{1}{11}$ (2) $\frac{2}{11}$ (3) $\frac{2}{9}$ (4) $\frac{1}{4}$


**29.** உருவில் சீராக்கும்பாலம் காட்டப்பட்டுள்ளது. இதனால் கிடைக்கும் பயப்பு அலையின் வடிவத்தைக் காட்டும் சரியான வரைபு எது?




(1)



(2)



(3)



(4)



[பக். 4 ஐப் பார்க்க.

**30.** மாதவிடாய்ச் சக்கரத்தில் சூலகத்தினுள் நிகழும் மாற்றங்களைக் குறிக்கும் அவத்தைகள் அடங்கிய தேர்வாக அமைவது.
(1) மாதவிடாய் அவத்தை, பெருக்கல் அவத்தை
(2) புடைப்பு அவத்தை, சுரப்பு அவத்தை
(3) புடைப்பு அவத்தை, இலுயூற்றியல் அவத்தை
(4) பெருக்கல் அவத்தை, சுரப்பு அவத்தை

**31.** நற்போணையாக்கம் அடைந்த நீர் நிலையிலிருந்து வெளியேற்றப்படும் வாயு எது?
(1) ஐதரசன் சல்பைட்டு (2) காபனீரொட்சைட்டு (3) நைதரசன் (4) ஈலியம்


**32.** சூழல் மாசாக்கம் காரணமாக ஏற்படும் பாதிப்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
*A* - நீர்வாழ் அங்கிகள் அழிவடையும்.
*B* - சுண்ணக்கல் போன்ற பாறைகள் கரைந்து செல்லும்.
*C* - வளிமண்டலத்தில் வாயுக்களின் சதவீதம் மாறும்.
*D* - நற்போசணையாக்கம் ஏற்படும்.
இவற்றில் அமில மழையினால் ஏற்படும் பாதிப்புகள் ஆவன.
(1) *A*, *B* மட்டும். (2) *B*, *C* மட்டும்.
(3) *A*, *B*, *C* மட்டும். (4) *A*, *B*, *C*, *D* எல்லாம்.

**33.** உயிர்ச் சடப்பொருளில் பிரதான உயிர் மூலக்கூறுகள் யாவற்றிலும் உள்ளடங்கியுள்ள மூலகங்கள்
(1) காபன், ஐதரசன், நைதரசன் (2) காபன், ஐதரசன், ஒட்சிசன்
(3) ஐதரசன், ஒட்சிசன், பொசுபரசு (4) ஐதரசன், ஒட்சிசன், நைதரசன்


**34.** 1 mol $dm^{-3}$ சோடியம் ஐதரொட்சைட்டின் 500 $cm^3$ கரைசலைத் தயாரித்துக் கொள்வதற்கு தேவையான சோடியம் ஐதரொட்சைட்டின் திணிவு யாது? (Na = 23, O = 16, H = 1)
(1) 10 g (2) 20 g (3) 30 g (4) 40 g

**35.** இழை மின்குமிழில் 100 W, 230 V எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது வீட்டு மின்சுற்றுடன் இணைக்கப்பட்டால் இதனூடாகப் பாயும் மின்னோட்டம் எவ்வளவு?
(1) 0.34 A ஆகும். (2) 0.43 A ஆகும். (3) 0.51 A ஆகும். (4) 2.3 A ஆகும்.

**36.** உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப உலோகக் குற்றியை நீரில் அமிழ்த்தியபோது விற்றராசின் வாசிப்பு யாது?
(1) 2 N
(2) 4 N
(3) 6 N
(4) 8 N





**37.** உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பொபினைச் சுற்றி அதிக எண்ணிக்கையில் காவலிடப்பட்ட செப்புக் கம்பி சுற்றப்பட்டுள்ளது. செப்புக் கம்பியின் இரு முனைகளிலும் நியோன் மின்குமிழ் பொருத்தப்பட்டுள்ளது. வலிமை மிக்க காந்தச் சட்டகம் சுருளின் மத்தியில் உள்ள துளையினூடாக வேகமாக மேல், கீழாக அசைக்கப்பட்டது. இது தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.




*A* - காந்தத்தை வேகமாக சுருளினூடாக அசைக்கும் போது நியோன் மின்குமிழ் கணப்பொழுதில் ஒளிர்ந்தது.
*B* - காந்தத்தை சுருளினுள் வைக்கும்போது தொடர்ச்சியாக நியோன் மின்குமிழ் ஒளிர்ந்தது.
*C* - காந்தத்தை சுருளில் இருந்து வேகமாக வெளிநோக்கி அசைக்கும்போது நியோன் மின்குமிழ் உடனடியாக ஒளிர்ந்தது.
மேற்கூறித்த கூற்றுகளுள் சரியானது / சரியானவை,
(1) *A* மட்டும். (2) *B* மட்டும்.
(3) *A*, *B* மட்டும். (4) *A*, *C* மட்டும்.

[பக். 5 ஐப் பார்க்க.

**38.** கீழே தரப்பட்டுள்ள சோதனைக் குழாய்களில் உள்ள பதார்த்தங்களை சம அளவான நேரம் வைத்து துருப்பிடிக்கும் வீதம் அறிய சோதிக்கப்பட்டது.




துருப்பிடிக்கும் வீதம் குறையும் ஒழுங்கு


(1) *A*, *B*, *C* (2) *B*, *A*, *C* (3) *C*, *B*, *A* (4) *B*, *C*, *A*

**39.** சோடியம் அணுவொன்றின் திணிவு $3.819 \times 10^{-23}\,g$ ஆகும். அணுத்திணிவு அலகின் பெறுமானம் $1.67 \times 10^{-24}\,g$ ஆகும். சோடியத்தின் சார் அணுத்திணிவு

(1) $\dfrac{1.67 \times 10^{-24}\,g}{3.819 \times 10^{-23}\,g}$ (2) $\dfrac{3.819 \times 10^{-23}\,g}{1.67 \times 10^{-24}\,g}$

(3) $\dfrac{1.67 \times 10^{-24}\,g}{3.819 \times 10^{-23}\,g \times \frac{1}{12}}$ (4) $\dfrac{3.819 \times 10^{-23}\,g}{1.67 \times 10^{-24}\,g \times \frac{1}{12}}$

**40.** நேர்கோட்டுப் பாதையில் பயணிக்கும் பொருளொன்றின் இயக்கத்தின் முதல் 60 செக்கனில் அவதானித்துப் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய வேக(v) - நேர(t) வரைபு வரைபுபடுத்தப்பட்டது. இது தொடர்பான பின்வரும் கூற்றுகளை அவதானியுங்கள்.




*A* - முதல் 30 செக்கனில் பொருள் சீரான அமர்முடுகலுடன் பயணித்துள்ளது.

*B* - முதல் 60 செக்கனில் பொருள் மீது சீரான விசை தொழிற்பட்டுள்ளது.

*C* - $t = 45\,s$ இல் பொருளின் வேகம் $4.5\,m\,s^{-1}$ ஆகும்.

வழங்கப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப சரியானது / சரியானவை?

(1) *A* மட்டும். (2) *B* மட்டும். (3) *A*, *C* மட்டும். (4) *B*, *C* மட்டும்.

***

# க.பொ.த. (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

**விஞ்ஞானம் II** | **மூன்று மணித்தியாலம்**


**கவனிக்க வேண்டியவை :**

(i) **பகுதி A யின் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.**

(ii) **பகுதி B யில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.**

## பகுதி A - கட்டமைப்பு வினாக்கள்

**1. (A)** சூழற்றொகுதியொன்றில் ஒவ்வொரு போசணை மட்டத்தில் அங்கிகளின் எண்ணிக்கை, உயிர்த்திணிவு, சக்தி ஆகியவற்றுடன் சக்தியுடன் தொடர்பான கூம்பகங்கள் மூன்றைக் கீழே காணலாம்.




(i) இங்கு $Y, Z$ ஆகிய கூம்பகங்களைப் பெயரிடுக.

$Y$ - ..... $Z$ - .....

(ii) $X$ கூம்பகத்தில் இடைவெளி (a) இற்குரிய பெறுமானம் எவ்வளவு?

.....

(iii) தரப்பட்ட கூம்பகங்களில் தலைகீழான கூம்பக வடிவிலும் காணப்படக்கூடிய கூம்பகம் எது / எவை?

.....


(iv) மேலே விபரிக்கப்பட்ட போசணை மட்டத்திற்குப் பொருத்தமான நான்கு இணைப்புக் கொண்ட உணவுச் சங்கிலியொன்றை எழுதுக.

(v) மேற்குறித்த சூழலுக்கு பாரவுலோகம் சேர்ந்ததாயின் எந்த அங்கியில் அதிகளவு செறிவு காணப்படும்?

**(B)** இலங்கையில் குறித்த மாகாணமொன்றில் சில வருடங்களாக சிறுநீரக நோய் பரவுவது தொடர்பான சில தகவல்களை அருகிலுள்ள அட்டவணையில் காணலாம்.

| வருடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2011 | 250 |
| 2012 | 600 |
| 2013 | 750 |
| 2014 | 2000 |
| 2015 | 5000 |

(i) வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பருமட்டான வரைபை வரைக.




(ii) தரப்பட்ட தகவல்களுக்கமைய சிறுநீரக நோயாளிகளின் பரம்பல் தொடர்பாக எதிர்வுகூறக் கூடியது யாது?

.....

.....

**(C)** உயிர்க்கோளத்தில் காபன் மூலகம் சுழற்சியடையும் முறையை விளக்கும் பருமட்டான அமைப்பு கீழே காணப்படுகிறது.




(i) இங்கு *x* எனக் குறிப்பிடப்பட்ட செயன்முறை யாது?

.....

(ii) செயன்முறை *x*, *y* ஆகியவற்றுக்கிடையில் காணப்படும் வேறுபாட்டைக் குறிப்பிடுக.

.....

.....

**(D)** கொழும்பு நகரில் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்ட *P*, *Q* என்னும் காலை உணவு வேளைகள் இரண்டு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| ***P* உணவு வேளை** | **பிரதான உணவு** | **உணவு உற்பத்தி செய்யப்பட்ட இடத்திற்கான தூரம் (மைல்)** |
|---|---|---|
| சிவப்பு அரிசிச் சோறு | சிவப்பு அரிசி | 2 (சொந்த வயல்) |
| கிழங்குச் சொதி | கிழங்கு | 90 (நுவரெலியா) |
| தேங்காய்ச் சம்பல் | தேங்காய் | 80 (அனுராதபுரம்) |
| பப்பாசி | பப்பாசி | 0 (செந்த வீட்டுத்தோட்டம்) |

| ***Q* உணவு வேளை** | **பிரதான உணவு** | **உணவு உற்பத்தி செய்யப்பட்ட இடத்திற்கான தூரம் (மைல்)** |
|---|---|---|
| பாஸ்மதி அரிசிச் சோறு | அரிசி | 1720 (பாக்கிஸ்தான்) |
| பருப்புக் கறி | பருப்பு | 925 (இந்தியா) |
| வெங்காயச் சம்பல் | வெங்காயம் | 925 (இந்தியா) |
| அப்பிள் | அப்பிள் | 4000 (அவுஸ்திரோலியா) |

(i) *P*, *Q* உணவு வேளைகளுக்கான உணவின் மைல் பெறுமானத்தைக் கணிக்க.

.....

.....

.....

.....


(ii) (a) மேற்குறித்த உணவின் மைல் பெறுமானத்திற்கு ஏற்ப நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமான உணவு வேளை *P*, *Q* என்பவற்றுள் எது எனக் குறிப்பிடுக.

.....

(b) உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.

.....

**2. (A)** சுவாசத்தின்போது காபனீரொட்சைட்டு வெளியேற்றப்படுவதைக் காட்டுவதற்கு அமைக்கப்பட்ட உபகரண அமைப்பை உருவில் காணலாம்.




(i) இவ் உபகரணம் செயற்படுவதற்கு முனை *X* இல் தொடுக்க வேண்டிய உபகரணத்தைப் பெயரிடுக.

.....

(ii) மேலே வினா (i) இல் குறிப்பிடப்பட்ட உபகரண அமைப்பில் உள்ள தவறு காரணமாக அது முறையாகச் செயற்படவில்லை. அத்தவறைக் குறிப்பிடுக.

.....

(iii) தவறுகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் இவ்வமைப்பில் பின்வரும் ஒவ்வொன்றும் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கான நோக்கத்தைக் குறிப்பிடுக.

(a) பொற்றாசியம் ஐதரொட்சைட்டுக் கரைசல் .....

(b) குடுவை "B" இல் நிறமற்ற சுண்ணாம்புக் கரைசல்.....

(c) குடுவை "D" இல் நிறமற்ற சுண்ணாம்புக் கரைசல்.....

(*B*) கீழே முள்ளந்தண்டற்ற விலங்குகள் கொண்டுள்ள சில இயல்புகள் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| *P* | கல்சியம் காபனேற்றால் ஆக்கப்பட்ட ஒரு கவசம் காணப்படும் |
| *Q* | மூட்டுக்களைக் கொண்ட பாதம் |
| *R* | கூரான முட்களைக் கொண்ட உடற்கவசம் காணப்படும். |
| *S* | கலப்படை இரண்டால் ஆன உடல் உண்டு. |
| *T* | கைற்றினால் ஆன புறவன்கூடு காணப்படுகிறது, |

(i) மேலே தரப்பட்டுள்ள இயல்புகளுள் வெட்டுக்கிளி கொண்டுள்ள இயல்புகளைக் காட்டும் ஆங்கில எழுத்தை எழுதுக.

.....

(ii) மேலே தரப்பட்டுள்ள இயல்புகளில் வெட்டுக்கிளி கொண்டிராத இயல்புகளைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைக் குறிப்பிட்டு அவ்வியல்புகளைக் கொண்டுள்ள முள்ளந்தண்டற்ற விலங்குக் கணங்களைப் பெயரிடுக.

| எழுத்து | உரிய இயல்புகளைக் காட்டும் முள்ளந்தண்டற்ற விலங்கு கணம் |
|---|---|
| | |
| | |
| | |

(*C*) கலத்தில் காணப்படும் புன்னங்கங்கள் சிலவற்றின் இலத்திரன் நுணுக்குக்காட்டியினூடான உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



*X* *Y* *Z*

மேலே தரப்பட்டுள்ள உருக்களை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| புன்னங்கம் | புன்னங்கத்தின் பெயர் | பிரதான தொழில் |
|---|---|---|
| *X* | | பதார்த்தங்களைச் சுரத்தல் கடத்துதல் |
| *Y* | | |
| *Z* | | |

**3. (A)** தாக்க வீதத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதற்கு கல்சியம் காபனேற்று, ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்தை பயன்படுத்தி செய்யப்பட்ட சோதனையின் தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| அமைப்பு | கல்சியம் காபனேற்றின் இயல்பும் அளவும் | ஐதான ஐதரோகுளோரிக் கமிலத்தின் செறிவு | வெப்பநிலை |
|---|---|---|---|
| *A* | தூள் 50 g | 1 mol $dm^{-3}$ | 30°C |
| *B* | தூள் 50 g | 2 mol $dm^{-3}$ | 30°C |
| *C* | துண்டு 50 g | 2 mol $dm^{-3}$ | 30°C |
| *D* | தூள் 50 g | 2 mol $dm^{-3}$ | 60°C |

(i) மேற்குறித்த தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| | அமைப்புச் சோடி | தாக்க வீதத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணி |
|---|---|---|
| (a) | *A* யும் *B* யும் | |
| (b) | *B* யும் *C* யும் | |
| (c) | *B* யும் *D* யும் | |

(ii) கல்சியம் காபனேற்று, ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துக்கிடையிலான தாக்கத்தின்போது தோன்றும் வாயு யாது?

.....

(iii) மேலே வினா (ii) இல் குறிப்பிட்ட வாயுவை இனங்காண உதவும் சோதனையைக் குறிப்பிடுக.

.....

.....

**(B)** உலோகம் *P*, *Q*, *R* ஆகியவற்றின் தாக்கவீதத்தை ஒப்பிடுவதற்கு ஆய்வுகூடத்தில் செய்யப்பட்ட பரிசோதனை விளைவுகளைக் காட்டும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது. (தாக்கம் நடைபெற்றதைக் காட்ட √ என்னும் குறியீடும் தாக்கம் நடைபெறாததைக் காட்ட × என்னும் குறியீடும் இடப்பட்டுள்ளது.

| உலோகம் | சுடுநீருடன் | கொதிநீராவியுடன் | ஐதான அமிலத்துடன் |
|---|---|---|---|
| *P* | × | √ | √ |
| *Q* | × | × | × |
| *R* | √ | √ | √ |

(i) *P*, *Q*, *R* ஆகிய உலோகங்களை அவற்றின் தாக்குத்திறனுக்கு ஏற்ப இறங்கு வரிசைப்படுத்துக.

.....

(ii) *P*, *Q*, *R* என்பவற்றுள் தொழிற்பாட்டுத் தொடரில் ஐதரசனுக்கு கீழாக அமைந்துள்ள உலோகம் எது?

.....


(iii) *P*, *Q*, *R* ஆகிய உலோகங்களில் இரும்புக்கு கதோட்டுப் பாதுகாப்பு அளிக்க உதவும் உலோகம் எது?

.....

- மின்னிரசாயனக் கலம் கீழே தரப்பட்டுள்ளது.

(iv) *P*, *R* ஆகியவற்றுள் *A* மின்வாயாக எவ்வுலோகம் பயன்படுத்தப்படுகின்றது?

*A* .....





(v) $2H^+(aq) + 2e \longrightarrow H_2(g)$ என்னும் அரைத்தாக்கம் நிகழும் மின்வாய் எது?

.....

(vi) ஒட்சியேற்றத் தாக்கம் எந்த மின்வாய் அருகில் நிகழ்கின்றது?

.....

(C) உருவில் காட்டப்பட்டுள்ள உபகரண அமைப்பைப் பயன்படுத்தி பித்தளைக் கரண்டியின் மீது செம்பு முலாமிடுவதற்கு மாணவன் ஒருவனுக்குத் தேவைப்பட்டது.





(i) இங்கு *X* ஆல் பயன்படுத்தக் கூடிய கரைசல் எது?

.....

(ii) *P, Q* ஆகியவற்றுக்கு இடையில் மின்கலமொன்றை எவ்வாறு தொடுக்கலாம் என்பதை உருவில் வரைந்து காட்டுக.

**4. (A)** *P, Q, R, S* ஆகிய கம்பிகளைப் பயன்படுத்தி தடையின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணியை அறிந்துகொள்ள அமைக்கப்பட்ட அமைப்பை உருவில் காணலாம். இங்கு *Q, R, S* கம்பிகளின் பரப்பளவு சமனாகும்.





(i) தொடுகைச் சாவி *P, Q, R, S* ஆகிய கம்பிகளின் முனைகள் மீது தனித்தனியாகத் தொடுகையுறச் செய்தபோது மின்குமிழின் சார்பளவான ஒளிர்வையும அதன் மூலம் தடையின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணியையும் அட்டவணையில் முழுமையாகக் குறிப்பிட முடியாமல் இருந்தது. அவ்வட்டவணையைப் பூர்த்திசெய்க.

| பயன்படுத்திய கம்பிச் சோடிகள் | மின்குமிழின் பிரகாசம் கூடுவதற்கு தொடுகையுற வேண்டிய கம்பி | செல்வாக்குச் செலுத்தும் காரணி |
|---|---|---|
| *P* உம் *Q* உம் | *P* | ..... |
| ..... உம் ..... உம் | ..... | கம்பியின் நீளம் |
| *Q* உம் *S* உம் | ..... | ..... |

(ii) கீழே தரப்பட்டுள்ள உருக்கள் தடை *R* கொண்ட மின் கடத்தும் கம்பிகள் சில தொடுக்கப்பட்டுள்ள இரண்டு சந்தர்ப்பங்களைக் காட்டுகின்றன. இவ் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமானத் தடையின் பெறுமானத்தைக் குறிப்பிடுக.


(a) 

.....

(b) 

.....

(*B*) எளிய மின்மோட்டரின் அமைப்பு ஒன்று உருவில் காணப்படுகின்றது




(i) இங்கு காந்தப்புலம் *P* இலிருந்து *Q* இற்கா அல்லது *Q* இலிருந்து *P* இற்கா எனக் குறிப்பிடுக.

.....

(ii) *R, T* எழுத்துக்களால் குறிக்கப்படும் பகுதிகளைப் பெயரிடுக.

*R* - .....

*T* - .....

(iii) பகுதி *R* இரண்டாகப் பிரிக்கப்பட்டிருப்பதன் தேவையைக் குறிப்பிடுக.

.....

(iv) இம் மோட்டருக்கு மின்னை வழங்கும் போது அது *x, y* ஆகியவற்றில் எத்திசையில் சுழல்கின்றது?

.....

(v) மோட்டருக்கு வழங்கப்படும் மின்னோட்டத்தின் திசை மாற்றப்படும்போது மோட்டரின் சுழற்சித் திசைக்கு யாது நிகழும்?

.....

(vi) *AB, BC, CD* ஆகிய பகுதிகளைக் கருதும்போது அது அமைந்துள்ள அமைவிற்கேற்ப எப்பகுதியின் மீது விசை **தொழிற்படாது** எனக் குறிப்பிடுக.

.....

(vii) அதற்கான காரணத்தையும் குறிப்பிடுக.

.....


**

*[பக் 6 ஐப் பார்க்க.*

## பகுதி B – கட்டுரை வினாக்கள்

• **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.

**5. (A)** நரம்புத் தொகுதியுடன் தொடர்பான பகுதிகள் சில உருவில் காட்டப்பட்டுள்ளன.




(i) நரம்புத் தொகுதியின் தொழிற்பாட்டலகு எது?

மேற்குறித்த வரிப்படங்களுக்குரிய ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(ii) *X, Y, Z* என்பவற்றுள் *B* யாகத் தொழிற்படும் கட்டமைப்பைப் பெயரிடுக.

(iii) வாங்கியிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்கு கணத்தாக்கங்களை கடத்தும் நரம்புக்கலம் /நியுரோன் யாது?


**(B)** (i) கீழே தரப்பட்டுள்ள உறுப்புகளில் காணப்படும் தசையிழைய வகைகள் தொடர்பான பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக. (உரிய இயல்புகள் காணப்படின் √ என்னும் அடையாளத்தையும் காணப்படாவின் × என்னும் அடையாளத்தையும் இடுக.)

| உறுப்பு | தனிக்கரு உள்ள கலம் | வரி கொண்டது. | இச்சைவழி இயங்குவது | கிளை கொண்டது. |
|---|---|---|---|---|
| இதயம் | | | | |
| இரைப்பை | | | | |

(ii) களைப்படையாத தசையிழையம் மேலே தரப்பட்ட எவ்வுறுப்பில் உள்ளது?

(iii) இரைப்பையில் உள்ள தசையிழைய வகை காணப்படும் வேறு உறுப்பைப் பெயரிடுக.

**(C)** எமது உடலின் குருதியில் குளுக்கோசு மட்டத்தை சீராக்குவதைக் காட்டும் குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.




(i) (a) குறிப்பு A இல் குறிப்பிடப்பட்டுள்ள *x, y* ஆகிய ஓமோன்களைப் பெயரிடுக.

(b) *x, y* ஓமோன்களைச் சுரக்கும் சுரப்பிகளையும் அதன் அமைவிடத்தையும் எழுதுக.

(c) ஓமோன் *x* சுரப்பது குறைவடைவதால் ஏற்படும் நோய் நிலைமை யாது?

(d) குருதியில் குளுக்கோசு மட்டம் சீராக்கலில் *x, y* ஆகிய ஓமோன்களின் தொழில்களைத் தனித்தனியாக எழுதுக.

(ii) (a) பின்வரும் சந்தர்ப்பங்களில் ADH ஓமோனின் அளவு கூடுமா அல்லது குறையுமா எனக் குறிப்பிடுக.

குருதியில் நீர்ச்சதவீதம் அதிகரிக்கும்போது
குருதியில் நீர்ச்சதவீதம் குறையும்போது

(b) உடலில் நீரின் அளவு குறையும்போது சிறுநீரகத்தில் எச் செயன்முறை மூலம் அது சீராக்கப்படுகிறது எனக் குறிப்பிடுக.

(c) மேலே (ii) (b) இல் குறிப்பிட்ட செயன்முறை அதிகளவில் நடைபெற்றால் சிறுநீரகத்தின் இடுப்பில் அல்லது சிறுநீர்ப்பையில் ஏற்படும் குறைபாடொன்றைக் குறிப்பிடுக.

[பக் 7 ஐப் பார்க்க.

**6. (A)** பாடசாலை ஆய்வுகூடத்தில் மற்றும் சமயலறையில் வெவ்வேறு தேவைகளுக்கு அமிலம் பயன்படுத்தப்படுகிறது.

(i) பாடசாலை ஆய்வுகூடத்தில் சாதாரணமாக பெருமளவில் பயன்படுத்தப்படும் வன்னமிலமொன்றினதும் சமயலறையில் பயன்படுத்தப்படும் அமிலமொன்றினதும் இரசாயனப் பெயர்களை முறையே எழுதுக.

(ii) செப்புசல்பேற்று, பொற்றாசியம் பரமங்கனேற்று, ஐதரோகுளோரிக்கமிலம், சோடியமைதரொட்சைட்டு என்பனவற்றின் நீர்க்கரைசல்கள் அடங்கிய போத்தல்களில் பெயர்ச் சுட்டிகள் காணப்படவில்லை. இக்கரைசல்களுக்கு மக்னீசிய நாடத்துண்டுகளை இட்டபோது பெறப்பட்ட அவதானங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **கரைசல்** | **கரைசலின் நிறம்** | **மக்னீசிய உலோகத்துடன் காட்டும் தாக்கம்** | **மக்னீசியத்துடன் தாக்கமடையும்போது வாயுக்கள் வெளியேறுமா இல்லையா** |
|---|---|---|---|
| (a) | நீலம் | நடைபெறும் | வெளியேறும் |
| ஐதான ஐதரோக் குளோரிக்கமிலம் | நிறமற்றது | நடைபெறும் | (b) |
| (c) | (d) | இல்லை | இல்லை |
| சோடியம் ஐதரொட்சைட்டு | நிறமற்றது | (e) | இல்லை |

மேற்குறித்த அட்டவணையின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு (a), (b), (c), (d), (e) ஆகியவற்றுக்குரிய விடையை ஒழுங்கு முறையில் எழுதுக.

(iii) ஐதான ஐதரோக்குளோரிக்கமிலக் கரைசல் மக்னீசியம் உலோகத்துடன் காட்டும் தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயன சமன்பாட்டை எழுதுக.

(iv) கரைசல்கள் சிலவற்றின் pH பெறுமானம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **கரைசல்** | *A* | *B* | *C* | *D* | *E* |
|---|---|---|---|---|---|
| pH **பெறுமானம்** | 7.5 | 6 | 1.5 | 3.5 | 10 |

(a) இக்கரைசல்களில் அமிலத்தன்மை கூடிய கரைசல் எது?

(b) இக்கரைசல்களில் எவ்வகையான பாசிச்சாயத்தாள் இடப்படும்போது நிறமாற்றத்தை எதிர்பார்க்க முடியும்?

**(B)** சில மூலகங்களின் அணு எண்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. பயன்படுத்தப்பட்ட குறியீடுகள் நியமக் குறியீடு அல்ல. அவகாதரோவின் மாறிலி $= 6.022 \times 10^{23}$ ஆகும்.)

| மூலகம் | *A* | *B* | *C* | *D* | *E* | *F* | *G* |
|---|---|---|---|---|---|---|---|
| அணு எண் | 3 | 6 | 8 | 10 | 11 | 12 | 17 |

(i) மேலே தரப்பட்டுள்ள மூலகங்களில் ஒரே கூட்டத்தைச் சேர்ந்த மூலகங்கள் எவை?

(ii) ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாவது ஆவர்த்தனத்தில் நான்காம் கூட்ட மூலகம் எது?

(iii) எந்தவித இரசாயனத் தாக்கத்திலும் **ஈடுபடாத** மூலகம் எது?

(iv) மேலே வினா (iii) இல் குறிப்பிடப்பட்ட மூலகத்தின் இலத்திரன் நிலையமைப்பை எழுதி, இம்மூலகம் இரசாயன தாக்கத்தில் **ஈடுபடாமைக்கான** காரணத்தை விளக்குக.

(v) குளிர் நீருடன் வேகமாகத் தாக்கமடையும் மூலகம் எது?


(vi) மூலகம் *G* இன் அணுக்கள் இரண்டு சேர்ந்து மூலக்கூறை உருவாக்கும். அம் மூலக்கூறின் லூயிஸ் கட்டமைப்பை எழுதுக.


(vii) *F*, *G* சேர்ந்து உருவாகும் சேர்வையின் மூலக்கூற்றுச் சூத்திரத்தை எழுதுக.

(viii) மேலே அணு *C* இல் இரண்டு சேர்ந்து $C_2$ மூலக்கூறை உருவாக்கும் $C_2$ இன் சார் அணுத்திணிவு 32 ஆகும். 16 g, $C_2$ இல் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கையைக் கணிக்க.

*[பக் 8 ஐப் பார்க்க.*

**7. (A)** உருவில் திண்மமெழுகு வெப்பமேற்றப்படும் சந்தர்ப்பத்தையும் அதன்போது நேரத்துடன் வெப்பநிலை வேறுபடும் முறையைக் காட்டும் வரைபையும் காணலாம்.




(i) பின்வரும் கால இடைவெளிகளுள் மெழுகு காணப்படும் பௌதிக நிலைகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

- *A*, *B* யிற்கிடையில்
- *B*, *C* யிற்கிடையில்
- *C*, *D* யிற்கிடையில்


(ii) மெழுகின் உருகுநிலையை மேலே தரப்பட்டுள்ள வரைபிலிருந்து எவ்வாறு தீர்மானிப்பீர்?

(iii) மெழுகிற்கு தொடர்ச்சியாக வெப்பத்தை வழங்கினாலும் *B*, *C* யிற்கிடையில் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படுவதில்லை. இக்காலப்பகுதியில் வழங்கப்படும் வெப்பம் எப்பெயர்கொண்டு அழைக்கப்படும்.?


(iv) *D* ஆனது மெழுகின் கொதிநிலை எனின், சந்தர்ப்பம் *D* இற்கு பிறகு வெப்பமாக்கியினால் வெப்பத்தை மேலும் வழங்கும்போது வெப்பநிலை வேறுபடும் முறையை மேற்குறித்த வரைபை விடைத்தாளில் பிரதிசெய்து வரைந்து காட்டுக.

(v) இச் சோதனைக்காகப் பயன்படுத்தப்படும் மெழுகின் திணிவு 200 g ஆகும். அதன் வெப்பநிலையை 40 °C இலிருந்து 50 °C ஆக மாற்றுவதற்கு வழங்கப்பட வேண்டிய வெப்பத்தின் அளவு யாது? (மெழுகின் த.வெ. கொ. $2800\,J\,kg^{-1}\,K^{-1}$) (50°< B)

**(B)** விரிவு வில்லை, ஒருங்கு வில்லை ஆகிய இரண்டு வில்லைகளில் பொருளொன்றின் விம்பங்கள் தோன்றும் விதம் உருவில் காணப்படுகின்றது.




வில்லை *A*




வில்லை *B*

(i) *A*, *B* என்பவற்றுள் ஒருங்கு வில்லை எது?

(ii) (a) விம்பம் $I_1$ , $I_2$ ஆகியவை உண்மை விம்பமா? மாயவிம்பமா? எனக் குறிப்பிடுக.


(b) உண்மை விம்பம், மாய விம்பம் என்பதை நீர் எவ்விடயத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிப்பீர்.

(iii) *A* வகை வில்லையில் மேற்குறித்த உருவில் காணப்படும் முறையில் விம்பம் தோன்றுவதற்கு எவ்விடங்களுக்கு இடையில் பொருள் வைக்கப்பட்டுள்ளது?

(iv) *A* வகை வில்லையில் தோன்றும் விம்பத்தையொத்த விம்பம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பமொன்றினைக் குறிப்பிடுக.

(v) பொருள் $O_1$ ஐ *X* புள்ளியில் வைக்கும்போது தோன்றும் விம்பத்தின் இயல்புகள் **இரண்டை** எழுதுக.

**(C)** இரண்டு முறைகளில் துணிக்கைகள் பொறிமுறையலையில் அதிர்வடைவதை உரு காட்டுகின்றது.




(i) *C*, *D* திசையில் துணிக்கைகள் அதிர்வடையும் பொறிமுறையலை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?


(ii) *A*, *B* திசையில் துணிக்கைகள் அதிர்வடையும் சந்தர்ப்பமொன்றைக் குறிப்பிடுக.

(iii) ஒலியலையானது எம்முறையான துணிக்கையின் அதிர்வு மூலம் ஊடுகடத்தப்படுகிறது?

(iv) வினா (ii) இல் குறிக்கப்பட்ட பொறிமுறையலைக்கும் மின்காந்த அலைக்குமிடையில் காணப்படும் வேறுபாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

*[பக். 9 ஐப் பார்க்க.*

**8. (A)** பயற்றம் தாவரங்கள் இரண்டில் உள்ள பூக்கள் இரண்டை உருவில் காணலாம்.




உரு 1 உரு 2

(i) $P, Q, R, S$ ஆகியவற்றுள் பெண்ணகத்தின் பகுதிகளைக் குறிப்பிடும் எழுத்துகளை எழுதுக.

(ii) இங்கு $X$, $Y$ எனக் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மகரந்தச் சேர்க்கை முறைகளையும் குறிப்பிடுக.


(iii) $X$, $Y$ ஆகிய இரு மகரந்தச் சேர்க்கை முறைகயுள் எம்முறை மூலமான மகரந்தச் சேர்க்கைக்கு பூக்கள் அதிகளவில் இசைவாக்கம் அடைந்துள்ளன.

(iv) உரு 1 இல் காட்டப்பட்டுள்ள பூ பச்சை நிற பயற்றை நெற்றையும் உரு 2 இல் காட்டப்பட்டுள்ள பூ மஞ்சள் நிற பயற்றை நெற்றையும் உருவாக்கின்றது. பச்சை நிற நெற்று ஓரினநுக நிலையில் ஆட்சியுடையதாகவும் மஞ்சள் நிற நெற்று ஓரினநுக நிலையில் பின்னடைவானதாகவும் காணப்பட்டது. $Y$ முறையிலான மகரந்தச் சேர்க்கையின் பின் தோன்றும் தாவரப் பரம்பரையின் நெற்றின் நிறம் தலைமுறையடையும் முறையை வரைந்து காட்டுக. ( பச்சை நிறத்திற்கு '$G$' உம் மஞ்சள் நிறத்திற்கு '$g$' உம் பயன்படுத்துங்கள்.)

(v) $F_1 \times F_1$ இடையில் கலப்புப் பிறப்பாக்கம் ஏற்படும்போது $F_2$ சந்ததியில் தலைமுறையடையும் முறையை பெனற் சட்டகத்தில் காட்டுக.

(vi) இங்கு $F_2$ சந்ததியில் பெறப்படும் தோற்றவமைப்பின் விகிதத்தை எழுதுக.

**(B)** தரப்பட்ட வரிப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக..




(i) நீர்த் தேக்கத்தில் நீர் கொண்டுள்ள சக்தி எவ்வகையானது எனக் குறிப்பிடுக.

(ii) நீர்மின்வலு நிலையங்களின் செயற்பாட்டிற்கு உயரமான இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களில் நீரைத் தேக்கிவைப்பதற்கான காரணத்தை விளக்குக.

(iii) நீர் மின்வலு நிலையங்களில் மின் உற்பத்தி செய்யப்படும்போது ஏற்படும் சக்தி நிலைமாற்றத்தைக் காட்டும் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப்படத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.

நீர் ⟶ நீர் ⟶ சுழலி ⟶ டைனமோ

(a)..... சக்தி (b)..... சக்தி (c)..... சக்தி (a)..... சக்தி

(களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளபோது) (பாயும்போது)

மின்சக்தி

(a), (b), (c), (d) வெற்றிடங்களில் காணப்படும் சக்தி நிலைப்பாட்டைத் தனித்தனியே எழுதுக.

(iv) இங்கு $Y$, $Z$ ஆகிய நிலைமாற்றி வகைகளைக் குறிப்பிடுக.

(v) $X$ நிலைமாற்றியில் முதன்மைச் சுற்றின் அழுத்தவேறுபாடு 25 kV ஆவதுடன் துணைச் சுற்றின் "அழுத்த வேறுபாடு 220 kV ஆகும். அந்நிலைமாற்றியில் முதன்மை துணைச்சுற்றுகளின் எண்ணிக்கைக்கிடையிலான விகிதத்தைக் காண்க.

(vi) உருவில் காட்டியவாறு நீரினால் புள்ளி $P$ இன் மீது ஏற்படுத்தப்படும் அமுக்கத்தைக் காண்க.
(நீரின் அடர்த்தி = $1000\,kg\,m^{-3}$, $g = 10\,m\,s^{-2}$)

*[பக். 10 ஐப் பார்க்க.*


**9. (A)** திரவ பெற்றோலிய (LP) வாயுவில் பிரதானமாக அடங்கியுள்ள கூறுகள் புரொப்பேன், பியூற்றேன் ஆகியவை அற்கேன் வகையான ஐதரோகாபன்களாகும்.

(i) அடங்கியுள்ள காபன் எண்ணிக்கை n ஆகக் கொண்டு அற்கேனுக்கான பொது மூலக்கூற்றுச் சூத்திரத்தை எழுதுக.

(ii) புரொப்பேனின் மூலக்கூற்றுச் சூத்திரத்தை எழுதுக.

(iii) பியூற்றேனின் கட்டமைப்பை வரைக.

(iv) பொலித்தீன் என்பது எதிலீன் என்னும் மூலக்கூறுகள் பல சேர்ந்து பல்பகுதியமடைந்துருவான பெரிய மூலக்கூறாகும். எதிலீனின் மூலக்கூற்றுச் சூத்திரம் $C_2H_4$ ஆகும். அம்மூலக்கூறின் ஒருபகுதியத் அமைப்பின் கட்டமைப்பு சூத்திரம் கீழே தரப்பட்டுள்ளது.




இதற்கேற்ப பொலித்தீன் மீண்டுவரும்அலகையும், பல்பகுதியத்தை வரைந்து காட்டுக.

**(B)** ஒத்த செறிவைக் கொண்ட சோடியம் ஐதரொட்சைட்டும் ஐதரோக் குளோரிக் அமிலக் கரைசலும் $50\,cm^3$ வீதம் எடுக்கப்பட்டு கலக்கப்பட்டது. இங்கு நிகழ்ந்த இரசாயன தாக்கத்தின்போது $x\,kJ$ வெப்பம் வெளியேற்றப்பட்டது.

(i) வெப்ப மாற்றத்திற்கு ஏற்ப மேற்கூறிய தாக்கம் எவ்வகையானது?

(ii) மேற்குறித்த வெப்ப மாற்றத்தின் சக்தி மட்ட வரைபை வரைந்து காட்டுக.

**(C)** கட்டடங்கள் அமைக்கும்போது அத்திவாரம் இடுவதற்காக கொங்கிறீற்று தூண்களை (திராந்திகளை) நடுவதற்கு முளைக்குற்றிச் செலுத்தி பயன்படுத்தப்படும்.




(i) மேல் உயர்த்தப்பட்ட முளைக்குற்றிச் செலுத்தியின் திணிவு $2000\,kg$ ஆகும். அதன் நிறை யாது? $(g = 10\,m\,s^{-2})$

(ii) முளைக்குற்றிச் செலுத்தி தூணின் மீது படும்போது ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கு அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள உபாயமொன்றைக் குறிப்பிடுக.

(iii) இவ் முளைக்குற்றிச் செலுத்தியை பாரந்தூக்கி மூலம் $20\,m$ மேலே உயர்த்துவதற்கு 100 செக்கன் எடுத்தது.

(a) முளைக்குற்றிச் செலுத்தியை உயர்த்துவதன் காரணமாக அதில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஈர்ப்பு அழுத்தச் சக்தி எவ்வளவு?

(b) பாரந்தூக்கியின் வலு எவ்வளவு?

(iv) உயரமாகவுள்ள முளைக்குற்றிச் செலுத்தி கீழே விழும்போது ஏற்படும் சக்திநிலை மாற்றம் யாது?

(v) சக்தி இழப்பு ஏற்படாதுவிடின் உயர்த்தப்பட்ட முளைக்குற்றிச் செலுத்தி தூணின் மீது விழும்போது கொண்டுள்ள வேகம் யாது?

(vi) முளைக்குற்றிச் செலுத்தி விடுவிக்கப்படும் போதுள்ள சந்தர்ப்பத்திலிருந்து தூணின் மீது விழும் வரைக்குமான வேக-நேர வரைபை வரைந்து காட்டுக.

***

# க.பொ.த (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

## விஞ்ஞானம் – பகுதி I

## புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 1 | 2 |
| 2 | 3 |
| 3 | 4 |
| 4 | 1 |
| 5 | 1 |
| 6 | 2 |
| 7 | 3 |
| 8 | 2 |
| 9 | 1 |
| 10 | 3 |
| 11 | 4 |
| 12 | 3 |
| 13 | 3 |
| 14 | 2 |
| 15 | 1 |
| 16 | 3 |
| 17 | 2 |
| 18 | 3 |
| 19 | 3 |
| 20 | 4 |

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 21 | 2 |
| 22 | 3 |
| 23 | 4 |
| 24 | 4 |
| 25 | 4 |
| 26 | 2 |
| 27 | 3 |
| 28 | 1 |
| 29 | 1 |
| 30 | 3 |
| 31 | 1 |
| 32 | 1 |
| 33 | 2 |
| 34 | 2 |
| 35 | 2 |
| 36 | 2 |
| 37 | 4 |
| 38 | 1 |
| 39 | 4 |
| 40 | 4 |

The National e-learning Portal for The General Education

[ பக். 2 ஐப் பார்க்க.

# க.பொ.த (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016
## விஞ்ஞானம் – பகுதி II
## புள்ளி வழங்கும் திட்டம்

## பகுதி A – கட்டமைப்பு வினாக்கள்

**1. (A)** (i) *Y* - எண்கூம்பகம் *Z* - உயிர்த்திணிவு கூம்பகம் (02 புள்ளிகள்)


(ii) 200 J (01 புள்ளி)

(iii) *Y, Z* (01 புள்ளி)

(iv) சரியான நான்கு இணைப்பு கொண்ட உணவுச் சங்கிலி (01 புள்ளி)

(v) இறுதி இணைப்பின் / அங்கியின் பெயர் (01 புள்ளி)

**(B)** (i)




(02 புள்ளிகள்)

ஒ (ii) கால அதிகரிப்புடன் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. (01 புள்ளி)

**(C)** (i) ஒளித்தொகுப்பு (01 புள்ளி)

(ii) * *x* ஆனது வளிமண்டள $CO_2$ அகத்துறிஞ்சுவதுடன் *y* செயற்பாடு மூலம் வளிமண்டல $CO_2$ விடுவிக்கப்படும்.

* செயற்பாடு *x* ஆனது பச்சைத் தாவரங்களில் நிகழ்வதுடன் செயற்பாடு *y* எல்லா அங்கிகளிலும் நிகழும். (01 புள்ளி)

(D) (i) *P* = மைல் (2 + 90 + 80 + 0) = 172 மைல்

*Q* = மைல் (1720 + 925 + 925 + 4000) = 7570 மைல் (02 புள்ளிகள்)

(ii) (a) *P* (01 புள்ளி)

(b)
- சூழல் நேயமிக்க / சூழல் பாதிப்பு குறைவடைதல்
- பிரயாணச் செலவு குறைவு
- உள்நாட்டுள்ளவைகளின் பெறுமதியை உணர்தல்.
- தொடர்ச்சியாக நிலவுதல் (01 புள்ளி)

மொத்தம் **15** புள்ளிகள்

*[ பக். 3 ஐப் பார்க்க.*

**2. (A)** (i) வளி உறிஞ்சி (01 புள்ளி)

(ii) "2" குடுவையில் குழாய் $P$ சுண்ணாம்பு நீருடன் தொடுகையுறாது இருத்தல்.
$Q$ குழாய் சுண்ணாம்பு நீருடன் தொடுகையுறுகின்றது. (01 புள்ளி)

(iii) (a) பொற்றாசியம் ஐதரொட்சைட்டுக் கரைசல் - வளிமண்டல $CO_2$ உறிஞ்சும் (01 புள்ளி)
(b) "$B$" குடுவையில் நிறமற்ற சுண்ணாம்பு நீர் - $CO_2$ அகத்துறிஞ்சியுள்ளதா என அறிதல். (01 புள்ளி)
(c) "$D$" குடுவையில் நிறமற்ற சுண்ணாம்பு நீர் - $CO_2$ வாயுவை இனங்காணல். (01 புள்ளி)

**(B)** (i) $Q, T$ (02 புள்ளிகள்)

(ii)

| முறை | உரிய இயல்பைக் காட்டும் முள்ளந்தண்டற்ற விலங்குக் கூட்டம் |
|---|---|
| $P$ | மொலஸ்கா |
| $Q$ | எக்கைனோடேர்மெற்றா |
| $R$ | சீலந்தரெற்றா / நைடேரியா |

(03 புள்ளிகள்)

**(C)**

| புன்னங்கம் | புன்னங்கத்தின் பெயர் | பிரதான தொழில் |
|---|---|---|
| $X$ | கொல்கியுடல் | பதார்த்தங்களைச் சுரத்தல் / கடத்தல் |
| $Y$ | கரு | கலத்தில் நடைபெறும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல். |
| $Z$ | இழைமணி | கலச்சுவாசம் |

(05 புள்ளிகள்)

**மொத்தம் 15 புள்ளிகள்**

**3. (A)** (i) (a) செறிவு (01 புள்ளி)
(b) தாக்கங்களின் பௌதிகநிலை அல்லது மேற்பரப்பளவு (01 புள்ளி)
(c) வெப்பநிலை (01 புள்ளி)

(ii) காபனீரொட்சைட்டு (01 புள்ளி)

(iii) காபனீரொட்சைட்டு வாயுவினுள் தனக்குச்சியை இடும்போது அது அணையும் அல்லது நிறமற்ற சுண்ணாம்பு நீர் பால் நிறமாக மாறும். (02 புள்ளிகள்)

**(B)** (i) $R > P > Q$ / $R$ , $P$ , $Q$ (01 புள்ளி)

(ii) $Q$ (01 புள்ளி)


(iii) $R$ / $P$ (01 புள்ளி)

(iv) $A$ - $P$ (01 புள்ளி)

(v) $A$ / $P$ (01 புள்ளி)

(vi) $B$ / $R$ (01 புள்ளி)

**(C)** (i) $CuSO_4$ / செப்பு சல்பேற்று அல்லது செம்புலோகம்
Cu உலோகம் உள்ள எந்தவொரு உப்பும் (01 புள்ளி)

(ii) 

(02 புள்ளிகள்)


**மொத்தம் 15 புள்ளிகள்**

*[ பக். 4 ஐப் பார்க்க.*


**4. (A)** (i)

| பயன்படுத்தப்பட்ட கம்பிச் சோடி | சாவி தொடும்போது மின்குமிழின் பிரகாசம் கூடும். | செல்வாக்குச் செலுத்தும் காரணி |
|---|---|---|
| *P* உம் *Q* உம் | *P* கம்பி | கடத்தியின் குறுக்குவெட்டுமுகப் பரப்பு (01) |
| ***Q*** உம் ***R*** உம் (01) | ***R*** (01) | கம்பியின் நீளம் |
| *Q* உம் *S* உம் | ***S*** (01) | கடத்தியின் குறுக்குவெட்டுமுகப் பரப்பு (01) |

(05 புள்ளிகள்)

(ii) (a) 

- $2R$ (01)

(b) 

- $\frac{R}{2}$ (01)

(02 புள்ளிகள்)

(*B*) (i) *P* இலிருந்து *Q* (01 புள்ளி)

(ii) *R* - பிளவு வளையம் *T* - தூரிகை (02 புள்ளிகள்)

(iii) தொடர்ச்சியாக எளிய மின்னைப் பெற்றுக் கொடுத்தல். (01 புள்ளி)

(iv) *y* (01 புள்ளி)

(v) சுழலும் திசை மாறுபடும். (01 புள்ளி)

(vi) *B C* (01 புள்ளி)

(vii) அது காந்தப் புலத்திற்குச் சமாந்தரமாக இருத்தல். (01 புள்ளி)

(மொத்தம் **15** புள்ளிகள்)

**

## பகுதி B - கட்டுரை வினா

**5. (A)** (i) தெறிப்புவில் (01 புள்ளி)

(ii) *Z* (01 புள்ளி)

(iii) *Y* (01 புள்ளி)

**(B)** (i)

| உறுப்பு | தனிக்கரு கொண்டது | வரிகொண்டது | இச்சைக்குட்பட்டது | கிளை கொண்ட கலம் |
|---|---|---|---|---|
| இதயம் | √ | √ | × | √ |
| இரைப்பை | √ | × | × | × |

8 ⟶ 04, 7/6 ⟶ 03, 5/4 ⟶ 02, 3/2 ⟶ 01, 01 ⟶ 00

(ii) இதயம் (01 புள்ளி)

(iii) உணவு செல்லும் வழி, குருதிக்குழாய், சிறுநீர்ப்பை (01 புள்ளி)

[ பக். 5ஐப் பார்க்க.

**(C)** (i) (a) *x* - இன்சுலின்
*y* - குளுக்ககோன் (02 புள்ளிகள்)

(b) சுரப்பி - சதையி /இலங்ககான்சிறுதீவுகள்
அமைவிடம் - பெருங்குடலுக்கும் முன்சிறுகுடலின் மடிப்புகளுக்கிடையில் (02 புள்ளிகள்)

(c) நீரிழிவு நோய். (01 புள்ளி)

(d) *x* - மேலதிக குளுக்கோசை கிளைக்கோஜனாக மாற்றுதல்
*y* - கிளைக்கோஜனை குளுக்கோசாக மாற்றுதல். (02 புள்ளிகள்)

(ii) (a) நீர்ச் சதவீதம் அதிகரிக்கும்போது - ADH செறிவு குறையும் /ADH சுரக்காது
நீர்ச் சதவீதம் குறையும்போது - ADH செறிவு கூடும். (02 புள்ளிகள்)

(b) மீள அகத்துறிஞ்சும் செயன்முறை (01 புள்ளி)

(c) கல் உருவாதல் (01 புள்ளி)

**மொத்தம் 20 புள்ளிகள்**

**6. (A)** (i) பாடசாலையில் - ஐதரோக்குளோரிக்கமிலம் /சல்பூரிக்கமிலம் /நைத்திரிக்கமிலம்
சமயலறையில் - சித்திரிக்கமிலம் /அசற்றிக்கமிலம் (02 புள்ளிகள்)

(ii) (a) - செப்புச் சல்பேற்று (b) - வாயு வெளியேறுதல். (c) - பொற்றாசியம் பரமங்கனேற்று
(d) - ஊதா (e) - தாக்கம் நடைபெறவில்லை.

$5 \longrightarrow 04,\ 4 \longrightarrow 03,\ 3 \longrightarrow 02,\ 2 \longrightarrow 01,\ 01 \longrightarrow 00$

(iii) $Mg(s) + 2HCl(aq) \longrightarrow MgCl_2(aq) + H_2(g)$ (01 புள்ளி)

(iv) (a) கரைசல் *C* (01 புள்ளி)

(b) நீலப்பாசிச் சாயத்தாள் (01 புள்ளி)


**(B)** (i) *A*, *E* / Li, Na / லித்தியம், சோடியம் (01 புள்ளி)

(ii) *B* / காபன் / C (01 புள்ளி)

(iii) *D* / நேயன் / Ne (01 புள்ளி)

(iv) 2, 8 (01 புள்ளி)
இறுதிச்சக்தி மட்டம் பூரணப்படுத்தப்பட்டுள்ளது / இறுதிச் சக்தி மட்டத்தில்
உச்ச இலத்திரன் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல். (02 புள்ளிகள்)

(v) *E* / சோடியம் / Na (01 புள்ளி)

(vi)  (01 புள்ளி)

(vii) $FG_2$ / $MgCl_2$ (01 புள்ளி)

(viii) $C_2$, 32 g இலுள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை $= 6.022 \times 10^{23}$
$C_2$, 16 g இலுள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை $= 6.022 \times 10^{23} \times \frac{16\,g}{32\,g}$ (01)
$= 3.011 \times 10^{23}$ (01) (02 புள்ளிகள்)

**மொத்தம் 20 புள்ளிகள்**


*[ பக். 6 ஐப் பார்க்க.*

**7. (A)** (i) *A*, *B* இடையில் - திண்மம் *B*, *C* இடையில் - திண்மம், திரவம் *C*, *D* இடையில் திரவம்
(03 புள்ளிகள்)

(ii) *B*, *C* வெப்பத்தை வழங்கும்போது வெப்பநிலை மாறுபடாமைக்கான காரணம் அது உருகுநிலையில் இருந்ததனால் ஆகும். (01 புள்ளி)

(iii) மறை வெப்பம் (01 புள்ளி)

(iv)




(01 புள்ளி)

(v) $Q = mc\theta$

$= \frac{200}{1000} \times 2800 \times (50 - 40)\,J = 5600\,J$ (02 புள்ளிகள்)

**(B)** (i) *A* (01 புள்ளி)

(ii) (a) $I_1$ - மாயமானது $I_2$ - மாயமானது (02 புள்ளிகள்)

(b) • ஒளிக்கதிர்கள் விரிவடைந்துள்ளது. அல்லது அதனைப் பின்புறமாக நீட்டும்போது சந்திக்கின்றன அல்லது
• விம்பமானது பொருளின் பக்கமாக அமைந்துள்ளது. (01 புள்ளி)

(iii) வில்லையின் குவியத்திற்கும் ஒளியியல் மையத்துக்கும் இடையில் (01 புள்ளி)

(iv) பெரிதாக்கும் வில்லை / கைவல்லையில் (01 புள்ளி)

(v) பெரியது
தலைகீழானது
உண்மையானது (ஏதாவது இரண்டிற்கு) (02 புள்ளிகள்)

**(C)** (i) நெட்டாங்கலை (01 புள்ளி)

(ii) நீரலை, இழையில் தோன்றும் குறுக்கலை (01 புள்ளி)

(iii) நெட்டாங்கு / சமாந்தரமாக / *C*, *D* திசையில் (01 புள்ளி)

(iv)

| பொறிமுறையலை | மின்காந்த அலை |
|---|---|
| • செலுத்துகைக்கு ஊடகம் அவசியம்<br>• செலுத்துகைக் கதி குறைவானது.<br>• மின்னியல்பும் காந்தவியல்பும் அற்றது | • செலுத்துகைக்கு ஊடகம் அவசியமில்லை.<br>• செலுத்துகைக் கதி அதிகமாகும்.<br>• மின்னியல்பும் காந்தவியல்பும் உண்டு |

(01 புள்ளி)

**மொத்தம் 20 புள்ளிகள்**

**8. (A)** (i) *R*, *S* (01 புள்ளி)

(ii) *X* - தன்மகரந்தச் சேர்க்கை *Y* - அயன் மகரந்தச் சேர்க்கை (02 புள்ளிகள்)

(iii) *Y* முறை - பரம்பரை /பிறப்புரிமை பல்வகைமை கொண்ட அங்கிகள்
*Y* முறை மூலம் நிகழ்வதால் (02 புள்ளிகள்)

(iv) *P* : *GG* (பச்சை) × *gg* (மஞ்சள்)

*G* : (*G*) (*g*) (01 புள்ளி)

*Gg* (பச்சை) (01 புள்ளி)

$F_1$

(v)

| ♀ \ ♂ | (*G*) | (*g*) |
|---|---|---|
| (*G*) | *GG* | *Gg* |
| (*g*) | *Gg* | *gg* |

(02 புள்ளிகள்)

(vi) பச்சை : மஞ்சள்
3 : 1 (01 புள்ளி)

**(B)** (i) அழுத்தச் சக்தி (01 புள்ளி)

(ii) அப்போது நீரின் அழுத்தச் சக்தி அதிகரிக்கும். நீர் பாயும்போது சுழலி சுழல்வதற்கு உயர் இயக்கச் சக்தியைப் பெற்றுக்கொள்ள (01 புள்ளி)

(iii) நீரின் → நீரின் → சுழலி → டைனமோ → மின் சக்தி
(a) அழுத்தச் சக்தி (சேமித்து வைக்கும்போது) (b)இயக்கச் சக்தி (பாயும்போது) (c)இயக்கச் சக்தி (d)பொறிமுறை சக்தி/இயக்கச் சக்தி

(02 புள்ளிகள்)

(iv) *Y* - படிகுறை நிலை மாற்றி *Z* - படிகுறை நிலை மாற்றி (02 புள்ளிகள்)

(v) 25: 220
5 : 44 (02 புள்ளிகள்)


(vi) $P = h \rho g$
$= 200 \times 1000 \times 10$ (01 புள்ளி)
$= 2\,000\,000\,Pa$ (01 புள்ளி)


**மொத்தம் 20 புள்ளிகள்**


*[ பக். 8 ஐப் பார்க்க.*

**9. (A)** (i) $C_nH_{2n+2}$ (01 புள்ளி)

(ii) $C_3H_8$ (01 புள்ளி)


(iii)  (01 புள்ளி)

(iv) 
மீண்டு வரும் அலகு


பல்பகுதியம் (02 × 2 = 04 புள்ளிகள்)

**(B)** (i) புறவெப்பத் தாக்கம் (01 புள்ளி)

(ii) சக்தி /kJ mol$^{-1}$




- தாக்கிகள், விளைவுகளின் பௌதிக நிலைகளை குறிப்பிட்டிருத்தல். (01 புள்ளி)
- வெப்பமாற்றத்திற்கு ஏற்ப அம்புக்குறியை சரியாக இடுதல். (01 புள்ளி)

**(C)** (i) $F = ma$

$= 2000 \times 10 = 20000\,N$ (01 புள்ளி)

(ii) தூணில் உலோகத்தாலான கவசம் காணப்படல். (01 புள்ளி)

(iii) (a) அழுத்தச் சக்தி $= mgh = 2000 \times 10 \times 20$

$= 400000\,J$ (02 புள்ளிகள்)

(b) வலு $= \dfrac{\text{சக்தி}}{\text{நேரம்}} = \dfrac{400000}{100}$

$= 4000\,W$ (02 புள்ளிகள்)


(iv) அழுத்தச் சக்தி $\longrightarrow$ இயக்கச் சக்தி (01 புள்ளி)

(v) $\dfrac{1}{2}mv^2 = mgh$

$v^2 = 2 \times 10 \times 20 = 400$

$v = 20\,m\,s^{-1}$ (02 புள்ளிகள்)

(vi)




(01 புள்ளி)

**மொத்தம் 20 புள்ளிகள்**

***

# க.பொ.த (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2017

## விஞ்ஞானம் I

ஒரு மணித்தியாலம்

**கவனிக்க வேண்டியது :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

(ii) **1** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்ற விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**1.** மனித உடலில் ஈமோகுளோபின் தொகுப்பிற்கு அவசியமான மூலகம்,

(1) கல்சியம் (2) மக்னீசியம் (3) அயடின் (4) இரும்பு

**2.** ஒளித்தொகுப்புச் செயன்முறையால் உற்பத்தியாகும் உணவு கொண்டு செல்லப்படும்போது உள்ள வடிவத்தையும் சேமிக்கப்படும்போது உள்ள வடிவத்தையும் முறையே தருவது,

(1) குளுக்கோசு, மாப்பொருள் (2) சுக்குரோசு, குளுக்கோசு

(3) மாப்பொருள், சுக்குரோசு (4) சுக்குரோசு, மாப்பொருள்

**3.** தூய பச்சை நிறம் மற்றும் மஞ்சள் நிற பயற்றை நெற்றுக்களை கலப்புப் பிறப்பாக்கம் செய்து பெறப்பட்ட $F_1$ சந்ததிகளுக்கிடையில் மீண்டும் கலப்புப் பிறப்பாக்கம் செய்யும்போது $F_2$ சந்ததியில் ஓரினநுகமுடைய ஆட்சியான மற்றும் ஓரினநுகமுடைய பின்னடைவான பரம்பரையலகுகள் முறையே சரியாகக் காட்டுவது (பச்சை $G$ மஞ்சள் $g$ எனக் கொள்க.)

(1) $GG, gg$ (2) $Gg, GG$ (3) $Gg, Gg$ (4) $gg, GG$

**4.** மனிதரில் விந்துக்கள் தற்காலிகமாகச் சேமிக்கப்படுவது,

(1) விதையில் (2) விதைப்பையில் (3) விதை மேற்றிணிவில் (4) முன்னிற்கும் சுரப்பியில்

**5.** நீர்க்கரைசலில் ஐதரசன் அயனை விடுவிக்கும் இரசாயன சேர்வை எது?

(1) அமிலம் (2) காரம் (3) உப்பு (4) உப்பும் காரமும்

**6.** உயிர்க்கம்பி, நொதுமல்கம்பி இரண்டும் தொடுப்பகற்றப்படுவது பின்வரும் எச்சாதனங்களில் ஆகும்?

(1) இடறு ஆளி, மிகை மின்சுற்றுடைப்பான் (2) இடறுஆளி, எச்சமான மின்சுற்றுடைப்பான்

(3) மின்சுற்றுடைப்பான், எச்சமான மின்சுற்றுடைப்பான் (4) இடறுஆளி, சிறு மின்சுற்றுடைப்பான்

**7.** கிளைக்கோஜனை குளுக்கோசாக மாற்றும் ஓமோன் எது?

(1) இன்சுலின் (2) ஈஸ்திரஜன் (3) குளுக்ககோன் (4) தைரொட்சின்

**8.** 240 V மின்குமிழொன்று 1 A மின்னோட்டத்தைப் பெறுகின்றது. இம் மின்குமிழ் இரண்டு மணித்தியாலம் ஒளிர்ந்தால் செலவாகும் மின்சக்தியின் அளவு யாது?

(1) 28.8 kJ (2) 480 kJ (3) 1 728 kJ (4) 28 800 kJ

**9.** தொற்றாநோய் அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

*A* - நீரகற்றல்

*B* - மதுசாரப் பாவனை

*C* - கழியூதாக் கதிர்கள் புவியை வந்தடைதல்.

இவற்றில் நாட்பட்ட சிறுநீரக நோய் ஏற்படக் காரணமானவை,

(1) *A, B* மட்டும் (2) *A, C* மட்டும் (3) *B, C* மட்டும் (4) *A, B, C* ஆகிய எல்லாம்

**10.** $^{24}_{12}Mg^{2+}$ இல் உள்ள புரோத்தன், நியூத்திரன், இலத்திரன் ஆகியவற்றின் எண்ணிக்கையைச் சரியான ஒழுங்குமுறையில் குறிப்பிடுவது,

(1) 12, 12, 10 (2) 10, 12, 12 (3) 12, 10, 12 (4) 12, 24, 10

• ஆவர்த்தன அட்டவணையில் மூலகங்கள் சில தரப்பட்டுள்ளன. அவை நியமக் குறியீடுகள் அல்ல. வினா இல. 11, 12 என்பவை இவ்வட்டவணையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | | | | | | | D |
| | | | | E | G | J | |
| L | | M | | | | Q | |
| R | | | | | | | |

**11.** இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவைகளில் மறை மின்னேற்றம் கூடிய மூலகம் எது?

(1) Q (2) G

(3) J (4) R

[பக். 2 ஐப் பார்க்க.

**12.** மூலகம் Q இன் இலத்திரன் நிலையமைப்பைச் சரியாகக் காட்டுவது.
(1) 2, 7 (2) 2, 8, 1 (3) 2, 8, 2 (4) 2, 8, 7

**13.** நீர் மூலக்கூறுகளுக்கிடையில் உள்ள மூலக்கூற்றுக் கவர்ச்சி விசை காரணமாக நீர் கொண்டுள்ள இயல்புகள் தொடர்பான கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
*A* - நீர் உயர் தன்வெப்பக்கொள்ளளவைக் கொண்டுள்ளது.
*B* - நீர் உயர் உருகுநிலையைக் கொண்டுள்ளது.
*C* - பனிக்கட்டியைவிட நீர் உயர் அடர்த்தியைக் கொண்டுள்ளது.
தரப்பட்டுள்ள கூற்றுகளில் சரியானவற்றைத் தெரிவுசெய்க.
(1) *A* மட்டும் உண்மையானது. (2) *A, B* மட்டும் உண்மையானவை.
(3) *A, C* மட்டும் உண்மையானவை. (4) *A, B, C* ஆகிய அனைத்தும் உண்மையானவை.

**14.** பொருளொன்றின் வேகம் $V$ ஆகவும் பொருள் உயர்த்தப்பட்ட நிலைக்குத்துயரம் $h$ ஆகவும், ஈர்வையிலான ஆர்முடுகல் $g$ ஆகவும் உள்ளபோது பொருளின் வேகம் $V$ தொடர்பான சரியான தேர்வு பின்வருவனவற்றுள் எது? (பொருளில் சக்தி இழப்பு ஏற்படவில்லை எனக் கருதுக.)
(1) $2gh$ (2) $\sqrt{2gh}$ (3) $\frac{gh}{2}$ (4) $\frac{2h}{g}$

**15.** குறித்தவோர் இடத்தில் வளிமண்டல அமுக்கம் 74 cm Hg ஆகும். இரசத்தின் அடர்த்தி $13600\,kg\,m^{-3}$ ஆகும். நீரின் அடர்த்தி $1000\,kg\,m^{-3}$ ஆகும். இவ்வளிமண்டல அமுக்கத்தினால் தாங்கக்கூடிய நீரின் உயரம் யாது?
(1) $\frac{74}{100} \times \frac{1000}{13600}$ (2) $\frac{74}{100} \times \frac{13600}{1000}$ (3) $\frac{13600}{74} \times \frac{100}{1000}$ (4) $\frac{1000 \times 100}{13600 \times 74}$

**16.** 1800 g நீரில் ($H_2O$) சோடியம் குளோரைட்டு (NaCl) 117 g கரைத்துப் பெறப்பட்ட கரைசலின் மூல்பின்னம் யாது? (Na = 23, Cl = 35.5) H - 1, O-16
(1) $\frac{1}{51}$ (2) $\frac{1}{50}$ (3) $\frac{49}{50}$ (4) $\frac{50}{51}$


**17.** மனித உடலின் ஒரு சீர்த்திடநிலையை பேணுவதற்கு பங்களிப்பு செய்யும் செயன்முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
*A* - குளுக்கோன் சுரத்தல்
*B* - கபச்சுரப்பி ADH சுரத்தல்
*C* - தோலில் மயிர்த்துளைக்குழாய் விரிவடைதல்
*A, B, C* ஆகியவை நிகழும் சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்க.
(1) குளுக்கோசு மட்டம் அதிகரித்தல், குருதியில் நீரின் அளவு அதிகரித்தல், உடல் வெப்பநிலை அதிகரித்தல்.
(2) குளுக்கோசு மட்டம் குறைதல், உடல் வெப்பநிலை குறைதல், குருதியில் நீரின் அளவு குறைதல்.
(3) குளுக்கோசு மட்டம் குறைதல், குருதியில் நீரின் அளவு குறைதல், உடல் வெப்பநிலை அதிகரித்தல்.
(4) குளுக்கோசு மட்டம் அதிகரித்தல், குருதியில் நீரின் அளவு குறைதல், உடல் வெப்பநிலை குறைதல்.

**18.** $1\,mol\,dm^{-3}$ குளுக்கோசு ($C_6H_{12}O_6$) கரைசலின் $100\,cm^3$ தயாரிப்பதற்குத் தேவையான குளுக்கோசின் திணிவு யாது? (C = 12, H = 1, O = 16)
(1) 18 g (2) 90 g (3) 180 g (4) 450 g

**19.** சேர்வைகள் சிலவற்றின் இயல்புகள் *A, B, C* எனக் கீழே தரப்பட்டுள்ளன.
*A* - நீர்க் கரைசலினூடாக மின் கடத்தப்படுகின்றது.
*B* - அனேக சேர்வைகள் நீரில் கரையும்.
*C* - அனேகமானவை அணுக்கள் பல சேர்ந்து உருவான மூலக்கூறுகளாகும்.
இக்கூற்றுகளில் அயன் பிணைப்புச் சேர்வை கொண்டுள்ள இயல்புகளைக் கொண்ட தேர்வு எது?
(1) *A* மட்டும். (2) *B* மட்டும். (3) *A, B* மட்டும். (4) *B, C* மட்டும்.

**20.** வாய்க்குழியில் மாப்பொருளானது மோல்றோசாக சமிபாடு அடையப் பங்களிக்கும் நொதியம் யாது?
(1) திருச்சின் (2) அமிலேசு (3) ரெனின் (4) இலிப்பேசு

**21.** பொருள் ஒன்றின் மீது எதிர் எதிரான திசையில் 12 N, 8 N ஆகிய இரண்டு விசைகள் தாக்குவதை உரு காட்டுகின்றது. இதன் விளையுள் விசை யாது?




(1) 8 N (2) 12 N
(3) 20 N (4) 28 N


**22.** பல்கல இருபாடையாலான உடலைக் கொண்ட விலங்குக் கூட்டம்,
(1) நிடாரியா (2) அனலிடா (3) மொலஸ்கா (4) எக்கைனடேர்மற்றா

*[பக். 3 ஐப் பார்க்க.*

**23.** கழியொலியின் இயல்பாக அமைவது
(1) மீடிறன் 20 000 Hz விடக் குறைவாகும்.
(2) வெற்றிடத்தினூடாகவும் பயணிக்கும்.
(3) வளியில் கூடிய வேகத்துடன் பயணிக்கும்.
(4) தெறிப்படையக் கூடியது.

**24.** குருதிக்குழாய்கள் காயமடையும்போது குருதியுறையாமல் தொடர்ச்சியாக பாய்வது ஈமோபீலியா நோயின் அறிகுறியாகும். இவ் ஈமோபீலியா
(1) பரம்பரையலகு இணைப்பு காரணமாக பின்னடைவான பரம்பரையலகு மூலம் தலைமுறையடைகின்றது.
(2) பரம்பரையலகு இணைப்பு காரணமாக ஏற்படுகிறது. ஆட்சியுடைய பரம்பரையலகு மூலம் தலைமுறையடைகின்றது.
(3) விகாரம் காரணமாக ஏற்படுகிறது, ஆட்சியுடைய பரம்பரையலகு மூலம் தலைமுறையடைகிறது.
(4) விகாரம் காரணமாக ஏற்படுகின்றது. பின்னடைவான பரம்பரையலகு மூலம் தலைமுறையடைகிறது.

**25.** உருவில் காட்டப்பட்டுள்ள தடையியின் தடைப்பெறுமானம் யாது?
(1) 642 Ω ± 10%
(2) 640 Ω ± 10%
(3) 6 400 Ω ± 10%
(4) 64 000 Ω ± 10%





| நிறம் | பெறுமானம் |
|---|---|
| நீலம்<br>மஞ்சள்<br>சிவப்பு | 6<br>4<br>2 |
| பொறுதிப் பெறுமானம் | வெள்ளி ± 10 |

**26.** நட்சத்திரமீன், முதலை ஆகியன அடங்கும் விலங்குக் கூட்டம் முறையே
(1) பீசஸ், எக்கைனடேர்மற்றா
(2) எக்கைனடேர்மற்றா, ரெப்ரீலியா
(3) அம்பீபியா, மமேலியா
(4) ரெப்ரீலியா, அம்பீபியா

**27.** இரசாயனத் தாக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றில் பிரிகைத்தாக்கமாக அமைவது எது?
(1) $Zn + CuSO_4 \longrightarrow ZnSO_4 + Cu$
(2) $CaO + H_2O \longrightarrow Ca(OH)_2$
(3) $CaCO_3 \xrightarrow{\Delta} CaO + CO_2$
(4) $H_2 + Cl_2 \longrightarrow 2HCl$

**28.** உருவில் காட்டப்பட்டுள்ள கலப்பிரிவு முறை,
(1) ஒரு மடியான கலத்தை உருவாக்கும்.
(2) புணரிகளை உருவாக்கப் பங்களிக்கும்.
(3) உயிரினத்தின் நிறமூர்த்த எண்ணிக்கை மாறாமல் வைத்திருக்க உதவும்.
(4) கலக்கருவில் உள்ள நிறமூர்த்தங்களின் எண்ணிக்கை மாறாமல் வைத்திருக்க உதவும்.




**29.** $H_2O_2$ ஆனது பின்வருமாறு பிரிகையடைகின்றது.

$2H_2O_2 \longrightarrow 2H_2O + O_2$

$O_2$ 8 g ஐப் பெற்றுக்கொள்வதற்கு பிரிகையடைய வேண்டிய $H_2O_2$ இன் மூல் எண்ணிக்கையைக் காண்க. (H = 1, O = 16)
(1) 0.5 mol (2) 1 mol. (3) 2 mol (4) 4 mol

**30.** பின்வருவனவற்றுள் *OA*, *OB* ஒளிக்கற்றைகளை விரிகற்றையாக்குவதற்கு பயன்படுத்தத் தக்கவை எது?
(1) குழிவுவில்லை, குவிவாடி
(2) குழிவுவில்லை, குழிவாடி
(3) குவிவுவில்லை, குழிவாடி
(4) குவிவுவில்லை, தளவாடி




**31.** மண்ணில் உள்ள அமோனியா ($NH_4^+$) அயன் நைத்திரைற்று ($NO_2^-$) அயனாக மாற்றும் பற்றீரியா அடங்கும் கூட்டம் எது?
(1) *Pseudomonas* (2) *Nitrobacter* (3) *Nitrosomonas* (4) *Rhizobium*


**32.** *X* என்னும் மூலகத்தின் குளோரைட்டின் இரசாயனச் சூத்திரம் *X*Cl எனின், *X* இன் காபனேற்றின் இரசாயனச் சூத்திரம்
(1) $XCO_3$ ஆகும். (2) $X_2CO_3$ ஆகும். (3) $X(CO_3)_2$ ஆகும். (4) $X_2(CO_3)_2$ ஆகும்.

**33.** வெற்றிடத்தினூடாக பயணிக்காதது,
(1) குறுக்கலை
(2) நெட்டாங்கு அலை
(3) X - கதிர்
(4) கட்புல ஒளி

[பக். 4 ஐப் பார்க்க.

**34.** உருவில் $x$ எனக் காட்டப்பட்டிருப்பது குவிவுவில்லையின்,

(1) குவியத்தூரத்தின் அரைப்பங்காகும்.
(2) குவியத்தூரமாகும்.
(3) குவியாத்தூரத்திற்கும் அதன் இரண்டு மடங்கிற்கும் இடைப்பட்ட தூரமாகும்.
(4) குவியத்தூரத்தின் இரண்டு மடங்காகும்.




**35.** 250 $cm^3$ குடுவையில் NaOH, NaCl, $NaHCO_3$ ஆகிய சேர்வைகளின் சமதிணிவுகளை முழுமையாகக் கரைத்து கரைசல் தயாரிக்கப்பட்டது. அக்கரைசல்களை செறிவுகளின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தும்போது கிடைக்கும் சரியான தேர்வு எது?
(Na = 23, O = 16, H = 1, Cl = 35.5)

(1) $NaCl < NaOH < NaHCO_3$
(2) $NaHCO_3 < NaCl < NaOH$
(3) $NaOH < NaCl < NaHCO_3$
(4) $NaOH < NaHCO_3 < NaCl$

**36.** நபரொருவர் தமது வீட்டை ஒளியூட்டுவதற்கு தற்பொழுது பயன்படுத்தும் 60 W இழைமின்குமிழ்கள் 6 இற்குப் பதிலாக 12 W LED குமிழ்கள் 6 ஐ பயன்படுத்த தீர்மானித்தார். அதனால் அவருக்கு வருடத்திற்கு 4400 ரூபா. பணம் சேமிக்க முடிந்தது. இதன்மூலம் வரக்கூடிய முடிவுகள்.

(1) LED அல்லது இழைமின்குமிழ்கள் ஆகியவற்றில் எதைப் பயன்படுத்தினாலும் கூடிய நன்மை கிடைக்கப் பெறுவதில்லை.


(2) LED குமிழ் பயன்படுத்தினால் செலவாகும் மின்னலகுகள் குறைவாகும்.

(3) இழைமின்குமிழ்களினால் பெறப்படும் ஒளியைப் பெற்றுக்கொள்ள அதிக எண்ணிக்கையான LED குமிழ்கள் ஒளிர வேண்டும்.

(4) இழைமின்குமிழ்கள் பயன்படுத்துவதன் காரணமாக செலவாகும் மின்னலகுகளின் எண்ணிக்கை குறைவாகும்.

**37.** சுற்றில் $AB$ என்னும் கடத்தியினூடாகப் பாயும் மின்னோட்டம் (I) காரணமாக ஏற்படும் காந்தப்புலத்தின் திசையைக் காட்டும் உருக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

⊙ காந்தப்புலத்தின் திசை தாளுக்கு வெளியாக
⊗ காந்தப்புலத்தின் திசை தாளினூடாக
⟶ மின்பாயும் திசை




(*a*) (*b*) (*c*) (*d*)

தரப்பட்டுள்ள உருக்களில் சரியானவை,


(1) (*a*), (*b*) மட்டும் (2) (*a*), (*d*) மட்டும் (3) (*b*), (*c*) மட்டும் (4) (*c*), (*d*) மட்டும்

**38.** இழையம் தொகுதி மட்டத்தில் ஒழுங்கமைந்துள்ள அங்கி

(1) அமீபா (2) மியுக்கர் (3) கிளமிடோமோனசு (4) மயில்கொன்றை


**39.** தண்டின் மீது தொழிற்படும் விளையுடன் விசைத்திருப்பம்

(1) 100 Nm வலஞ்சுழி
(2) 100 Nm இடஞ்சுழி
(3) 200 Nm இடஞ்சுழி
(4) 200 Nm வலஞ்சுழி




**40.** சுற்றில் ஆளி $S$ மூடப்படும்போது,

(1) $A$ மட்டும் ஒளிரும்.
(2) $B$ மட்டும் ஒளிரும்.
(3) $A$, $B$ இரண்டும் ஒளிரும்.
(4) $A$, $B$ இரண்டும் ஒளிராது.




***

# க.பொ.த. (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2017

## விஞ்ஞானம் II

மூன்று மணித்தியாலம்

**கவனிக்க வேண்டியவை :**

(i) **பகுதி A யின் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.**


(ii) **பகுதி B யில் உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் என்னும்** மூன்று **பகுதிகளிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவு செய்து பொருத்தமான மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.**

### பகுதி A - கட்டமைப்பு வினாக்கள்

**1. (A)** இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நபர்களின் வாழும் சூழல், அவர்கள் செய்யும் தொழில், உணவு பெறும் கோலம் ஆகியவை தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய இந்நபர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படுவது சம்பந்தமாக பெறப்பட்ட தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நபர்களின் பிரிவு | உணவுக்கோலம் | தொழில் | சுற்றாடல் | 1000 பேரில் நீரிழிவு நோயுள்ளவர்கள் |
|---|---|---|---|---|
| *A* | நாளாந்தம் ஒரு வேளை உடன் உணவு சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட உணவு, கோதுமை மா உணவு, இனிப்புச்சுவை கொண்ட உணவு. | நிறைவேற்று அதிகாரமட்ட தொழில் | நகரம் | 780 |
| *B* | வாரத்திற்கு ஒரு வேளை உடன் உணவு, சுவையூட்டி சேர்க்கப்பட்ட உணவு, கோதுமை மா உணவு, இனிப்பு சுவை கொண்ட உணவு. | நிறைவேற்று அதிகாரமட்ட தொழில் | நகரம் | 600 |
| *C* | சுதேச வாசனைத்திரவியம் பயன்படுத்தப்பட்ட மரக்கறி உணவு, இனிப்புச் சுவை கொண்ட உணவு | நிறைவேற்று அதிகாரமட்ட தொழில் | நகரம் | 200 |
| *D* | சுதேச வாசனைத்திரவியம் சேர்க்கப்பட்ட சுதேச மரக்கறி உணவுகள், சுதேச பழங்கள். | சாதாரண தொழில் | கிராமம் | 25 |
| *E* | சுதேச வாசனைத் திரவியம் சேர்க்கப்பட்ட வீட்டுத் தோட்டத்திலிருந்து பெறப்பட்ட மரக்கறி கொண்ட உணவு சுதேசபழங்கள். | சாதாரண தொழில் | கிராமம் | 05 |

(i) மேற் தரப்பட்டுள்ள தகவல்களை நேர்கோட்டு அல்லது நிரல் வரைபில் தருக.




(ii) மேற்குறிப்பிட்ட தகவலுக்கு அமைய நீரிழிவு நோய் பெரும்பாலானவர்களுக்கு ஏற்படுவதற்குக் காரணமான காரணியொன்றைக் குறிப்பிடுக.

.....

(iii) தொற்றா நோயிலிருந்து தவிர்த்துக் கொள்ள மேலேயுள்ள அட்டவணையில் E பிரிவில் உள்ள நபர்கள் சுதேச வைத்திய துறையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று அம்சங்களில் சிலவற்றை பூர்த்தி செய்துள்ளதைக் காணலாம். அவ்வாறு பூர்த்தி செய்த அம்சமொன்றைக் குறிப்பிடுக.

.....

[பக். 2 ஐப் பார்க்க.

(iv) அட்டவணை A, E நபர்களின் பிரிவில் இருவர் பிரதேசமொன்றில் காலையுணவைப் பெற்றுக் கொண்டமை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | உணவு வகை | உணவு உற்பத்தி செய்யும் இடத்திற்கான உணவு மைலின் பெறுமானம் |
|---|---|---|
| நபர் *A* | பாண் (கோதுமை மா - அமெரிக்கா) | 9340 |
| | கோழியிறைச்சி (கொழும்பு) | 200 |
| | மாஜரின் (கொழும்பு) | 200 |
| | அப்பிள் (அவுஸ்திரேலியா) | 4000 |
| | செயற்கை சுவையூட்டி (இந்தியா) | 500 |
| நபர் *E* | சிவப்பு அரிசி சோறு (தமது வயல்) | 02 |
| | பால் சொதி (தேங்காய் - மாத்தறை) | 25 |
| | பயறுக்கறி (தமது தோட்டம்) | 02 |
| | கப்பல் வாழை 01 (தமது தோட்டம்) | 00 |
| | எல்லா உணவுகளையும் தயாரிக்க தமது பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட வாசனைத்திரவியங்கள் | 04 |

(a) *A, E* ஆகிய நபர்கள் பெற்ற உணவுக் கோலத்திற்கு ஏற்ப எவ்வேளை உணவு நாட்டிற்கு நன்மை பயக்கும்?

.....

(b) வினா *(a)* இற்கு நீங்கள் அளித்த விடைக்குரிய காரணத்தைக் குறிப்பிடுக.

.....

**(B)** பொலித்தீன், பிளாத்திக்குப் பயன்பாடு பாரிய சூழல் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதால் தற்பொழுது அரசு அதனைத் தடை செய்துள்ளது. நிறுவனமொன்று வருடமொன்றிற்கு வெளியேற்றும் கழிவுகள் தொடர்பான தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| வகை | அளவு வருடத்திற்கு |
|---|---|
| பொலித்தின் (அலங்காரம்) | 2 500 |
| பொலித்தின் உறை | 15 000 |
| உணவுப்பொதித் தாள் | 10 000 |
| உணவு பொதியிடும் ரெஜிபோம் பெட்டி | 15 000 |

(i) இவை சூழலுக்கு விடப்படும்போது அவை ஒன்று சேர்கின்றன. இவ்வாறு இப்பொருள்கள் ஒன்று சேர்வது இயற்கையில் நடைபெறும் எச்செயன்முறை தடுக்கப்படுவதன் விளைவாக ஏற்படுகிறது?

.....

(ii) மேலே தரப்பட்டுள்ள தகவல்களிலிருந்து உணவு பொதியிடலில் மாற்று வழிமுறைக்குச் செல்ல வேண்டியுள்ளது தெளிவாகின்றது. இதற்காக மிகப் பொருத்தமான சூழல்நேய முறையொன்றைக் குறிப்பிடுக.

.....

(iii) நீங்கள் முன்வைத்த மாற்று முறையைப் பயன்படுத்தும் போது தோன்றும் பிரச்சினையொன்றைக் குறிப்பிடுக.

.....

**(C)** எமது நாட்டில் நீர்மின் உற்பத்தியின் கொள்ளளவை மேலும் அதிகரிக்க முடியாதுள்ளது. பெற்றோல் எரிபொருளினால் மின் உற்பத்தி செய்ய அதிக செலவு செய்ய வேண்டி உள்ளதால் மீளுருவாகக்கூடிய சக்தி முதலொன்றுக்கு செல்ல வேண்டியுள்ளது.

(i) இலங்கையில் மாற்றுச் சக்திவலு உற்பத்தியில் மிகக்குறைந்த செலவில் மின் சக்தி எம்முறையில் செய்யப்படுகிறது எனக் கூறுக.

.....

(ii) சக்திவலுப் பிரச்சினை தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணியொன்றைக் குறிப்பிடுக.

.....

(iii) மீளுருவாக்கக் கூடிய சக்தி வலு மூலங்கள் நிலைபேறானதாக அமைந்தாலும் அவற்றின் பயன்பாடு மிகக் குறைவாகக் காணப்படுவதற்கான காரணம் யாது?

.....

*[பக். 3 ஐப் பார்க்க.*

**(D)** நீர்த்தேக்கமொன்றிலிருந்து பெறப்பட்ட நீர்மாதிரியில் பச்சைநிற படையொன்று காணப்பட்டதுடன் அதிலிருந்து துர்நாற்றமும் வீசியது.

(i) இந்நிலைமைக்கு காரணம் யாது?

.....


(ii) மேலே வினா (i) இல் குறிப்பிட்ட நிலைமையினால் ஏற்படும் பாதகமான விளைவொன்றைக் குறிப்பிடுக.

.....

(iii) மேலே D இல் குறிப்பிடப்பட்ட நீர்த்தேக்கத்தில் உயிர்ச் செறிவடைதலைக் காணலாம். இவ் உயிர் செறிவடைதிலே பங்குகொள்ளும் பதார்த்தங்களின் இயல்பொன்றைக் குறிப்பிடுக. .....

.....

**2. (A)** தாவரக்கலங்கள், விலங்குக்கலங்கள் என்பவற்றை இணம்காணச் செய்யப்பட்ட சோதனையில் ஒளிநுணுக்குக்காட்டியினூடாக இழையங்களை அவதானித்தபோது பெறப்பட்ட கலங்களின் உருக்களை அருகில் காணலாம்.




(i) *A, B* ஆகியவற்றில் தாவரக்கலம் எது?

.....

(ii) மேற்குறித்த சோதனையில் கலங்களை வேறு பிரித்து அறிவதே எதிர்பார்க்கப்பட்டதாகும். இதற்காக நுணுக்குக்காட்டியில் பொருத்தமான எவ் வலு நிலையைப் பயன்படுத்தி அவதானிக்க வேண்டும்?

.....

.....

(iii) இந்த இரண்டு வகைத் கலங்களையும் அவதானிப்பதற்குரிய மாதிரிகளைப் பெயரிடுக.

.....

.....

**(B)** பின்வரும் வினா தாவர இழையங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். சில நிலையான தாவர இழையங்களின் இயல்புகள் A, B, C, D எனக் கீழே தரப்பட்டுள்ளன.

*A* - கலத்திடைவெளி உயிர்கலங்களினால் ஆனது.
*B* - ஒன்றுக்கொன்று வேறுபட்ட கல வகைகள் பலவற்றினால் ஆனது.
*C* - உயிரற்ற கலங்களினால் ஆனது.
*D* - கலங்களின் மூலைகள் செலுலோசினால் தடிப்படைந்து காணப்படுகிறது.

(i) *A, B, C D* ஆகியவற்றில்

(a) உருளைக்கிழங்குத் தண்டில் பெருமளவில் எவ்வியல்பை அவதானிக்க முடியும்?

.....

(b) கொண்டு செல்லலுக்குரிய இழையத்தின் இயல்பை விளக்கும் எழுத்து எது?

.....


(c) கன்னக்கலம் கொண்டுள்ள இயல்பு எது?

.....

(ii) *A, C* என்பவற்றுக்கு இடையில் கலங்களின் வடிவத்தில் காணப்படக்கூடிய வேறுபாடொன்றைக் குறிப்பிடுக.

.....

**(C)** பின்வரும் பாய்ச்சல் கோட்டுப்படத்தில் மனிதனின் இழையம் தொடர்பான தகவல்கள் சில தரப்பட்டுள்ளன. பின்வரும் வினாக்கள் இக்கோட்டுப்படத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.



(i) மேலணி இழையத்தின் பிரதான தொழில் யாது?

.....

(ii) *P* எனக் குறிப்பிடப்பட்டுள்ள தசையிழையத்திற்கு உதாரணம் தருக.

.....

(iii) தசைக்கலம் *Q* மனித உடலில் காணப்படும் இடத்தினைக் குறிப்பிடுக.

.....

(iv) குருதித்திரவவிழையத்தில் அடங்கியுள்ள கூறுகளைக் குறிப்பிடுக.


.....

(v) *R S* எனத் தரப்பட்டுள்ள தொழில்களைச் செய்யும் குருதியிலுள்ள கூறுகளின் பெயர் குறிப்பிடுக.

*R* : .....

*S* : .....

**3.** தனித்தனியாக எடுக்கப்பட்ட சம திணிவு கொண்ட மக்னீசிய நாடா மற்றும் மக்னீசியத் துண்டுகளுடன் $0.2moldm^{-3}$ ஐதரோகுளோரிக்கமிலத்தின் $100cm^3$ உடன் முழுமையாக தாக்கமடைய விடப்பட்டு வெளியேறிய வாயுக்களின் அளவு நேரத்துடன் அளக்கப்பட்டு வரைபாக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற வரைபுகள் X,Y எனப் பெயரிடப்பட்டுள்ளன.




(i) *X, Y* என்பவற்றில் மக்னீசிய துண்டுகளுக்குரிய வரைபு எது?

.....

(ii) வினா (i) இல் உமது விடைக்கான காரணம் யாது?

.....

(iii) இரண்டாவது நிமிடத்தின் இறுதியில் X இன் தாக்கவீதம் யாது?

.....

.....

.....

(iv) சேகரிக்கப்பட்ட உயர் வாயுக்கனவளவு யாது?

.....

(v) (a) மக்னீசிய உலோகம் ஐதான ஐதரோக்கமிலத்துடன் காட்டும் தாக்கத்தின் இரசாயன சமன்பாட்டை எழுதுக.

.....

(b) மேலேயுள்ள ஒவ்வொரு சோதனையின் இறுதியிலும் உருவாகும் மக்னீசியம் குளோரைட்டின் மூல் எண்ணிக்கை யாது? : Mg - 24, Cl - 35.5)

.....

.....

.....

(c) மேலே (b) இல் உருவான மக்னீசியம் குளோரைட்டின் திணிவு யாது?

.....

.....

.....

(d) மேலே (b) இல் வெளியேறிய ஐதரசன் வாயு மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது?

.....

.....

.....

(vi) மக்னீசியம் குளோரைட்டில்

(a) எவ்வகை இரசாயனப் பிணைப்பு காணப்படுகின்றது?

.....

(b) அப்பிணைப்பு வகையிலுள்ள சேர்வையின் இயல்பொன்றினை எழுதுக.

.....

(vii) நீரில் ஆய்வுகூடத்தில் ஐதரசன் வாயு சேகரிப்பதற்கு பல முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் நீரின் கீழ்முகப் பெயர்ச்சி ஒரு முறையாகும்.

(a) இங்கு பயன்படுத்தப்படும் வேறு முறையொன்றைக் குறிப்பிடுக.

.....

(b) வினா (a) இற்கு நீங்கள் வழங்கிய விடைக்கான காரணமொன்றைக் குறிப்பிடுக.

.....


(viii) (a) ஐதரசன் வாயுவின் பௌதீக இயல்பொன்றைக் குறிப்பிடுக.

.....

(b) ஐதரசன் வாயு பயன்படுத்தப்படும் இரசாயனக் கைத்தொழில் ஒன்றைப் பெயரிடுக.

.....

**4. (A)** சைபன் முறையைப் பயன்படுத்தி தாங்கியிலுள்ள நீர் வெளியேற்றப்படுவதற்கு அமைக்கப்பட்ட உருவைக் காணலாம். வளிமண்டல அமுக்கம் $\pi$ ஆகவும் ஈர்வையிலான ஆர்முடுகல் $g$ ஆகவும் நீரின் அடர்த்தி $\rho$ ஆகவும் உள்ளது எனக் கொள்க.




(i) தாங்கியிலுள்ள நீரை அகற்றுவதற்கு ஆரம்பத்தில் குழாய் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?

.....

(ii) பின்வரும் சந்தர்ப்பங்களில் முனை *B* யினூடாக வெளியேறும் நீரின் வேகம் கூடுமா? குறையுமா? மாற்றமடையாமல் இருக்குமா? எனக் கூறுக.

(a) தாங்கியினுள் முனை *A* மேலும் ஆழத்திற்கு கொண்டு செல்லல். .....

(b) தாங்கியிற்கு மேலும் நீர் சேர்த்தல் .....

(c) $h_3$ இன் நீளத்தை மேலும் அதிகரித்தல். .....

(iii) தாங்கியில் A முனையின் புள்ளியொன்றில் தாக்கும் அமுக்கத்தைக் காண்பதற்கான சமன்பாடு ஒன்றைத் தரப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதுக.

.....


(iv) முனை *B* வழியாக நீர் வெளியேறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணியான குழாயின் உயரத்தைக் காண்க.

.....

(v) திரவ அமுக்கம், வாயு அமுக்கம் பயன்படும் சந்தர்ப்பங்கள் ஒன்று வீதம் தருக.

- திரவ அமுக்கம் .....
- வாயு அமுக்கம் .....

**(B)** பொருளொன்று நீரில் அமிழும் சந்தர்ப்பங்களையும் அதன்போது விற்றராசு காட்டும் வாசிப்பையும் உருவில் காணலாம். *z* சந்தர்ப்பத்தில் இடம் பெயர்க்கப்பட்ட நீரின் நிறை 40 N ஆகும்.




(i) பொருளின் நிறை யாது?

.....

(ii) *x* சந்தர்ப்பத்தில் பொருளினால் இடம்பெயர்க்கும் நீரின் நிறையைக் காண்க.

.....

(iii) *y* சந்தர்ப்பத்தில் மேலுதைப்பு விசையின் பருமன் யாது?

.....

(iv) *z* சந்தர்ப்பத்தில் பொருளின் மீது தொழிற்படும் இரண்டு விசைகளைக் குறிப்பிடுக.

.....

.....

(v) *z* சந்தர்ப்பத்தில் பொருள் நீரை விட அடர்த்தி கூடிய திரவமொன்றில் அமிழ்த்தும்போது பொருளின் மீது ஏற்படுத்தப்படும் மேலுதைப்பு தொடர்பாக யாது கூறமுடியும்?


.....

******

## பகுதி B – கட்டுரை வினாக்கள்

• **மூன்று** வினாக்களுக்கு விடை எழுதுக.

**5.** **(A)** உருவில் மனிதனின் சிறுநீரகத்தி காட்டப்பட்டுள்ளது.




(1) *A*, *B*, *C* எனக் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் நிகழும் செயற்பாடுகள் ஒவ்வொன்றுவீதம் குறிப்பிடுக.

(ii) *D* *E* இல் உள்ள கட்டமைப்பு வேறுபாடு காரணமாக கலன் கோளத்தினூடாக பாயும் குருதியின் அமுக்கம் அதிகரிக்கின்றது. இங்குள்ள கட்டமைப்பு வேறுபாடு யாது?

(iii) சிறுநீர் உற்பத்திச் செயன்முறை மூன்று முறையில் நிகழ்கின்றது. உயர் வடிகட்டல், சுரத்தல் ஆகியவை அவற்றில் இரண்டு படிமுறைகளாகும்.

(a) மற்றைய படிமுறை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

(b) கலன்கோள மயிர்த்துளைக் குழாயின் சுவர், போமனின் உறையின் சுவர் என்பவற்றினூடாக குருதித்திரவவிழையம் வடிகட்டப்பட்டு உறையினுள் எச்செயன்முறையினூடாக நிகழ்கின்றது?

(c) சிறுநீரிலுள்ள நைதரசன் அடங்கிய கழிவுப் பதார்த்தமொன்றைக் குறிப்பிடுக.


(iv) மனிதனின் மலம் ஏன் கழிவுப் பொருளாகக் கருதப்படுவதில்லை காரணம் கூறுக.

(v) நபரொருவரின் உயர் குருதியமுக்கம் அதிகரித்துக் காணப்பட்டதுடன் இழையங்கள் வீங்கியும் காணப்பட்டன. குருதியின் PH பெறுமானம் குறித்த அளவை விடக் குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருக்கிறது. குருதியில் யூரியாவின் அளவு அதிகரித்துக் காணப்பட்டது.

(a) அவரிடம் உள்ள நோய் நிலைமைக்கு முக்கிய காரணம் யாது?


(b) சிறுநீரகத்தினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நபரொருவர் நாளாந்தம் பின்பற்ற வேண்டிய சுகாதார பழக்கமொன்றினை குறிப்பிடுக.

**(B)** பின்வரும் சட்டகத்தில் மனித குருதி இழையம் வகைப்படுத்தப்பட்டுள்ள முறை காட்டப்பட்டுள்ளது. இங்கு a, b, c, d என்பவற்றைப் பெயரிடுக.




(e) வெண்குருதி சிறுதுணிக்கையானது உடலினுள் புகும் பற்றீரியா போன்ற தொற்றுகளை அழித்து பாதுகாக்கின்றது. நுண்ணங்கிகளை அழிப்பதற்கு மேலதிகமாக வெண்குருதிச் சிறுதுணிக்கைகளினால் மேற்கொள்ளப்படும் வேறு தொழிலொன்றைக் குறிப்பிடுக.

(ii) நபரொருவரின் ECG வரைபை கீழே காணலாம். இக்குறிப்பு இதய வட்டத்தின் 3 சந்தர்ப்பங்களைக் காட்டுகின்றது.




(a) இவற்றின் ஒரு சந்தர்ப்பத்தைப் பெயரிடுக.

(b) உடலொலிபெருக்கிக்காட்டியினால் வட்டம் ஒலியை தெளிவாக கேட்க முடியும். இதற்கு லப் ஒலி இதயத்தின் எவ்வால்வுகள் மூடப்படுவதால் ஏற்படுத்தப்படுகின்றது?

(iii) சுகதேகி ஒருவரின் குருதியமுக்கம் B.P. = 120/95 mm Hg ஆகும். நபரொருவரின் குருதியமுக்கத்தை சேகரித்த போது பின்வருமாறு குறிப்பெடுத்தார்.

(a) இங்கு 120/95 என்னும் பெறுமானம் எக்குருதியமுக்கத்தை விளக்குகின்றது.

(b) மேற்படி அறிக்கையின் படி இவர் எதிர்நோக்கும் குருதி தொடர்பான நோய் நிலைமை யாது?

[பக். 8 ஐப் பார்க்க.

**6.** **(A)** சோடியம் ஐதரொட்சைட்டு, ஐதரோகுளோரிக்கமிலம் என்பவற்றுக்கிடையில் நடைபெறும் தாக்கத்தில் வெப்ப மாற்றத்தை பரிசோதனை ரீதியில் காட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பதார்த்தங்களின் பட்டியலின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

- $2\,mol\,dm^3$ NaOH கரைசல் $100\,cm^3$
- $2\,mol\,dm^{-3}$ HCl கரைசலின் $100\,cm^3$
- 0 - 100 °C வெப்பமானி
- பொலிஸ்ரைரினால் காவலிடப்பட்ட பாத்திரம்
- கண்ணாடிக் கோல்

i. இங்கு நடைபெறும் வெப்ப மாற்றத்திற்கு ஏற்ப இது அக வெப்பத்தாக்கமா புறவெப்பத் தாக்கமா எனக் குறிப்பிடுக.


ii. மேலே தரப்பட்டுள்ள பட்டியலில் அமிலம், காரம் ஆகிய இரண்டு கரைசலினதும் மொத்த நிறை எவ்வளவு?

iii. அமிலம், காரம் கொண்ட கரைசலின் ஆரம்ப வெப்பநிலை $30^0c$ ஆகும். கரைசல்களைச் சேர்த்துப் பெறப்பட்ட கலவையின் இறுதி வெப்பநிலை $38^0c$ எனின் தாக்கத்துடன் தொடர்பான வெப்பமாற்றத்தைக் கணிக்க. (நீரின் தன்வெப்பக்கொள்ளவு $= 4200\,J\,kg^{-1}\,°C^{-1}$ )


iv. இங்கு கண்ணாடி கோல் பயன்படுத்தப்பட்டமைக்கு காரணம் யாது?

v. பொருள் பட்டியலில் பொலிஸ்ரைரின் பாத்திரம் பயன்படுத்துவதற்குப் பதிலாக செப்புபாத்திரத்தை பயன்படுத்தினால் வெப்பநிலை அளவீட்டில் ஏற்படும் செல்வாக்கைச் சுருக்கமாக விளக்குக.

**(B)** இரண்டு ஐதரோகாபன்களின் கட்டமைப்புச் சூத்திரங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.



உரு *P*



உரு *Q*

i. (a) *P, Q* ஆகியவற்றில் அற்கேனைத் தெரிவு செய்க.


(b) மேலே i (a) இன் விடைக்கு காரணம் கூறுக.

ii. *P, Q* ஆகியவற்றில் தாக்குத்திறன் கூடியது எது? உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.

iii. *Q* இன் பல்பகுதியாக்கலில் தோன்றும் பல்பகுதியத்தின் பெயரைக் குறிப்பிடுக.

iv. டெப்லோன் உருவாக்கத்திற்கு பயன்படுத்தப்படும் Q இன் அலகுக் கட்டமைப்பை வரைக.

**(C)** அமிலமாக்கப்பட்ட நீரினை மின்பகுப்பு செய்யும் அமைப்பை உருவில் காணலாம்.





i. இவ்வமைப்பில்,
(a) அனோட்டு
(b) கதோட்டு
என்பவற்றைப் பெயரிடுக.


ii. அனோட்டில் நடைபெறும் தாக்கத்தைக் குறிப்பிடுக.

iii. கதோட்டில் வெளியேறும் வாயு மூலக்கூறின் லூயிசின் குற்றுப்புள்ளி அமைப்பை வரைக.


**7.** **(A)** கிடையான மேசையின் மீது 20N நிறை கொண்ட சீரான மேற்பரப்பு கொண்ட கனவடிவக்குற்றிகள் சில வைக்கப்பட்டுள்ள முறையையும் அதன் மீது நியூட்டன் தராசினால் விசை வழங்கப்படும் முறையையும் உருவில் காணலாம். சந்தர்ப்பம் A இல் வழங்கப்பட்ட விசை 40N ஆகும்.



சந்தர்ப்பம் *A*



சந்தர்ப்பம் *B*



சந்தர்ப்பம் *C*

i. *A, B* ஆகிய சந்தர்ப்பங்களில் *B* மரக்குற்றியை அசைப்பதற்கு வழங்கப்படும் விசை *A* யை விட அதிகமானதா அல்லது குறைவானதா எனக் குறிப்பிடுக.

ii. சந்தர்ப்பம் *A, B* ஆ.கியவற்றில் பொருளின் திணிவு பொருளில் ஏற்படுத்தப்படும் ஆர்முடுகல் என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுக.

iii. சந்தர்ப்பம் *C* இன் மீது வழங்கப்படும் விசை 60N எனின் பொருளில் ஏற்படும் ஆர்முடுகலைக் கணிக்க.


*[பக். 9 ஐப் பார்க்க.*

iv. சந்தரப்பங்கள் *A*, *B* இல் மரக்குற்றியின் அசைவைக் கருதும்போது மேற்பரப்புகளுக்கிடையே உள்ள செவ்வன் மறுதாக்கத்திற்கும் எல்லை உராய்விற்கும் இடையிலான தொடர்பு யாது?


v. *A* இல் மரக்குற்றியின் பக்கத்தை மாற்றி மீண்டும் மேசையின் மீது வைத்து விற்றரசினால் இழுக்கும்போது வழங்கப்பட்ட விசை 40N ஐ விட அதிகமானதா? குறைவானதா? அல்லது மாற்றமடையாதா? எனக் குறிப்பிடுக.

vi. தும்புக் கயிற்றின் மீது பெரிய விசையொன்று வழங்கினாலும் அதிலுள்ள நார்கள் பிரியாது. இதற்கான காரணத்தை விளக்குக.

**(B)** உருக்கள் I, II ஆனது அரை அலைச் சீராக்கத்தையும் முழு அலைச் சீராக்கத்தையும் மேற்கொள்ள அமைக்கப்பட்ட இரண்டு சுற்றுகளாகும். இங்கு A, B இற்கு இடையில் சைக்கிள் தைனமோ மூலம் மின் வழங்கப்பட்டது.



உரு I



உரு II

i. சைக்கிள் டைனமோவினால் எவ்வகையான மின் கிடைக்கப்பெறுகின்றது?

ii. உரு I இல் கிடைக்கும் சீராக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

iii. உரு I இல் டைனமோவின் முனை மாற்றப்பட்டால் வோல்ற்றளவுக்கும் நேரத்திற்கும் இடையிலான வரைபு எவ்வாறு அமையும்?

iv. உரு II இல் சுற்றுக்கு மின்னை வழங்கி B இலிருந்து A இற்கு மின் பயணிக்கும் போது ஒளிரும் LED எது?

v. உரு II இல் டைனமோ செயற்படும் சந்தர்ப்பத்தில் நேரத்துடன் வோல்ற்றளவு மாறுபடும் முறையை வரைந்து காட்டுக.

vi. இங்கு கிடைக்கும் மின்னை ஒப்பமாக்குவதற்கு சுற்றுடன் இணைக்க வேண்டிய துணைச் சாதனத்தைக் குறிப்பிடுக.

vii. இங்கு R இல் உள்ள LED யைச் சுற்றிலிருந்து அகற்றினால் விடை (v) இல் குறிப்பிட்ட வரைபில் எவ்வாறான மாற்றம் ஏற்படுகிறது?

**8. (A)** i. நன்றாக ஒளிபடும் இடத்திலுள்ள தாவர இலையொன்றை எடுத்து அதில் மாப்பொருள் உள்ளதா எனக் கண்டறிவதற்குச் செய்யும் சோதனையின் பிரதான படிமுறைகளை தொடரொழுங்கில் குறிப்பிட்டு, செயற்பாடுகளுக்கான காரணத்தைக குறிப்பிடுக..

ii. ஒளித்தொகுப்பிற்கு அவசியமான புறக்காரணிகளைக் குறிப்பிடுக.


iii. ஒளித்தொகுப்பின்போது நடைபெறும் தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டை எழுதுக.

iv. வளிமண்டலத்திலுள்ள வாயுக்களின் கூறுகளை சமநிலையில் வைத்திருப்பதற்கு ஒளித்தொகுப்பு பங்களிப்புச் செய்யும் முறையை விளக்குக.

**(B)** i. இயற்கைப் பதியமுறை இனப்பெருக்கத்தில் தாவரத்தின் நிலக்கீழ் அல்லது காற்றுக்குரிய பகுதிகளினால் புதிய தாவரங்கள் உருவாக்கப்படுகின்றன. பின்வரும் தாவரங்களில் தாவரத்தின் எப்பகுதியினால் புதிய தாவரங்கள் உருவாகின்றன?
(a) கறிவேப்பிலை
(b) சதைக்கரைச்சான்
(c) இஞ்சி

ii. செயற்கைப் பதியமுறை இனப்பெருக்க முறையான இழைய வளர்ப்பினால் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களைக் குறிப்பிடுக.

**(C)** 12 kg திணிவு கொண்ட A என்னும் பொருளானது நிலைக்குத்தாக உயர்த்தப்பட்டு உருவில் காட்டப்பட்டுள்ளவாறு 7m உயரமான குன்றின் மீது வைக்கப்பட்டுள்ளது.




i. வேலையைச் செய்வதற்கு உதவும் **இரண்டு** சக்தி வகைகளைக் குறிப்பிடுக.


ii. *A* இன் ஈர்வையிலான அழுத்தச் சக்தியின் பருமன் யாது?

iii. *A* கீழே விழும்போது ஏற்படும் சக்தி மாற்றத்தைக் குறிப்பிடுக.

iv. மேற்படி பொருளை குன்றின் மீது கொண்டு செல்ல 40 செக்கன்கள் எடுத்தது எனின் வேலை செய்யும் வீதத்தைக் காண்க

*[பக். 10 ஐப் பார்க்க.*

**9.** **(A)** மாணவனொருவன் சோடியம் குளோரைட்டு நீர்க்கரைசலை தாக்கத்திலீடுபடாத மின்வாய்களைப் பயன்படுத்தி மின்பகுப்பு செய்வதற்கு ஆய்வுகூடத்தில் செய்த அமைப்பை அருகில் காணலாம்.




(i) புறச்சுற்றினூடாக மின்பாயும்போது கிடைக்கப்பெறும் அவதானிப்பு ஒன்றைக் குறிப்பிடுக.

(ii) *x*, *y* மின்வாயாக பயன்படுத்தப்பட்டவை யாவை?

(iii) *x* மின்வாயிற்கு அருகில் வெளியேறும் வாயு யாது?


(iv) *y* மின்வாயிற்கு அருகில் நிகழும் அரைத் தாக்கத்தை எழுதுக.

(v) மின்பகுப்பின் இறுதியில் கரைசலில் தோன்றிய சேர்வை யாது?

(vi) இங்கு மின்கலத்தின் முனை மாற்றப்படும்போது முழுக்கலத்திலும் உருவாகும் பதார்தத்தின் மீதும் பாதிப்பு ஏற்படுமா? ஏற்படாதா?

(vii. மின்பகுப்பு தொழினுட்பத்தின் பயன்பாடு **இரண்டைக்** குறிப்பிடுக.

**(B)** 2Ω, 3Ω, 4Ω ஆகிய தடைகள் சுற்றுடன் இணைக்கப்பட்டுள்ள முறையைப் உருவில் காணலாம்.





(i) இவ்வாறு தடைகள் இணைக்கப்படுவது எவ்வாறு அழைக்கப்படும்?

(ii) எல்லாத் தடைகளுக்கும் சமமாக கிடைக்கும் காரணியைக் குறிப்பிடுக.

(iii) ஆளியை மூடும்போது தடைக்கு கிடைக்கும் வோல்ற்றளவு யாது?

(iv) 4Ω தடை அகற்றப்பட்டால் சுற்றில் மாறும் காரணியொன்றைக் குறிப்பிடுக.

இத்தடைகள் கீழே தரப்பட்டுள்ள உருவில் காட்டியவாறு மீண்டும் இணைக்கப்பட்டுள்ளது.




(v) இவ்வாறு தடை இணைக்கப்படும்போது சமமாக கிடைக்கும் காரணி ஒன்றையும் வேறுபடும் காரணியொன்றையும் குறிப்பிடுக.

(vi) இவ்வாறு தடையைத் தொடர்புபடுத்தும்போது கிடைக்கும் சமானத் தடையைக் கண்டறிக.

(vii) மேற்படி இரண்டு முறைகளிலும் தடைகளை இணைக்கும்போது சமானத் தடையின் பெறுமானம் எவ்வாறு மாற்றம் அடையும்?

***

# க.பொ.த (சா. தர) உதவிக் கருத்தரங்கு - 2017

## விஞ்ஞானம் I

## விடையளித்தல் தொடர்பான வழிகாட்டி

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 1 | 4 |
| 2 | 4 |
| 3 | 1 |
| 4 | 3 |
| 5 | 1 |
| 6 | 2 |
| 7 | 3 |
| 8 | 3 |
| 9 | 1 |
| 10 | 1 |
| 11 | 3 |
| 12 | 4 |
| 13 | 4 |
| 14 | 2 |
| 15 | 2 |
| 16 | 4 |
| 17 | 3 |
| 18 | 1 |
| 19 | 3 |
| 20 | 2 |


| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 21 | 2 |
| 22 | 1 |
| 23 | 4 |
| 24 | 1 |
| 25 | 3 |
| 26 | 2 |
| 27 | 3 |
| 28 | 4 |
| 29 | 1 |
| 30 | 1 |
| 31 | 3 |
| 32 | 2 |
| 33 | 2 |
| 34 | 3 |
| 35 | 2 |
| 36 | 2 |
| 37 | 4 |
| 38 | 4 |
| 39 | 2 |
| 40 | 4 |

[ பக். 2 ஐப் பார்க்க.

# க.பொ.த (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2017
## விஞ்ஞானம் – பகுதி II
## புள்ளி வழங்கும் திட்டம்

### பகுதி A – கட்டமைப்பு வினாக்கள்

**1. (A)** (i)




(02 புள்ளிகள்)

(ii)
- உணவுக்கோலம் (இனிப்பு உணவு / உடனடி உணவு / சுவையூட்டிகள் சேர்க்கப்பட்ட உணவு/ கோதுமைமா அடங்கிய உணவு)
- மன அழுத்தம் / தொழிலின் தன்மை
- உடற்பயிற்சி குறைவு

(01 புள்ளி)

(iii)
- உணவு
- உடற்பயிற்சி

(01 புள்ளி)

(iv) (a) *E* (01 புள்ளி)

(b) உணவு மைல் இழிவடைதல் (01 புள்ளி)

**(B)** (i) பிரிகையடைதல் / உக்குதல். (01 புள்ளி)

(ii)
- தாவர இலை வகை (வாழை/தாமரை / பாக்குமடல்)
- உக்கும் பொருள்களினால் செய்யப்பட்ட உணவு பொதிசெய்யும் தாள் (lunch sheet)
- கடதாசி /கடதாசி மட்டை (01 புள்ளி)

(iii) தாவர இலை வகை - பெற்றுக்கொள்வது கடினம் /பெருமளவில் பெற்றுக்கொள்வது கடினம் / பயன்படுத்தும்போது தாவர இலைகள் முடிவடைந்துவிடுதல்.

உக்கும் பொதித்தாள் அல்லது கடதாசி அல்லது /கடதாசி மட்டை - உற்பத்திச் செலவு அதிகம்
(01 புள்ளி)

**(C)** (i) சூரிய சக்தி (01 புள்ளி)

(ii)
- தொழிநுட்ப அபிவிருத்தி காரணமாக அதிக சக்தி நுகர்வு
- இயந்திரப் பொறிகளுக்காக அதிக சக்தி பயன்படுத்தப்படுகிறது.
- சனத்தொகை அதிகரிப்பு
- நகரமயமாக்கல்

(01 புள்ளி)

*[ பக். 3 ஐப் பார்க்க.*

(iii) • மனிதரிடையே இது தொடர்பான அறிவு குறைவு
• மூலதனச் செலவு /ஆரம்பச் செலவு அதிகம்
• மனப்பாங்கு மாற்றமடைய வேண்டும்.
• பொருளாதார இலாபம் எதிர்பார்க்கப்படுதல். (01 புள்ளி)

**(D)** (i) நற்போசணையாக்கம் (01 புள்ளி)

(ii) • நீரின் ஊடுபுகவிடும் தன்மை குறைவடைகிறது.
• நீர்த்தேக்கங்களிலுள்ள நீரைப்பயன்படுத்த முடியாமை.
• நீர்த்தாவரம் விலங்குகள் இறப்பதால் உயிர்பல்வகைமை குறைவடைதல்.
• நீர்த்தேக்கங்களின் கவர்ச்சி இல்லாமல் போகின்றது.
(01 புள்ளி)

(iii) • நீண்டகாலம் அழியாதிருத்தல்
• அங்கியின் உடலிலிருந்து வேறு அங்கியின் உடலுக்கு மாற்றப்படும்
• கொழுப்பில் கரையும்.
• உயிரிரசாயன ரீதியில் உயிர்பூட்டப்படும்.
(01 புள்ளி)

**மொத்தப்புள்ளிகள் 15**

**2. (A)** (i) *A* (01 புள்ளி)

(ii) தாழ்வலு (தாழ்வலு - கலங்களை வேறுபடுத்தி இனங்காண / இடைவலு - இழையம் அல்லது அங்கியொன்றின் கலங்களை வேறுபடுத்தி இனங்காணுதல் / உயர்வலுவின் கீழ் கலங்களைத் தெளிவாக இனங்காணல். (01 புள்ளி)

(iii) கன்னக்கலம், வெற்றிலையின் கீழ்ப்புறம் மேற்றோல், ரோகியோ இலையின் கீழ்ப்புற மேற்றோல், வெங்காய உரிக்கலம். (02 புள்ளிகள்)

**(B)** (i) (a) *A* (01 புள்ளி)
(b) *B* உம் *C* உம் (01 புள்ளி)
(c) *C* (01 புள்ளி)

(ii) *A* இன் கலம் கோளவடிவானது *C* இன் கலம் பல்கோண வடிவானது.
*A* இன் கலச்சுவர் செலிலோசினாலானது அதேவேளை *C* யின் கலச்சுவரில் செலுலோசின் மீது இலிக்கினின் படிவைக் கொண்டது. (01 புள்ளி)

**(C)** (i) உடல் மேற்பரப்பு போர்வையிடப்பட்டிருத்தல். (01 புள்ளி)

(ii) மழமழப்பான தசை / இதயத்தசை (01 புள்ளி)

(iii) குருதிக் குழாய், சிறுகுடல் சிறுநீர்பையின் சுவர் (01 புள்ளி)

(iv) நீர், போசனைப் பதார்த்தங்கள், விற்றமின், மருந்துவகை (01 புள்ளி)

(iii) *R* = செங்குருதிச் சிறுதுணிக்கை
*S* = குருதிச் சிறுதட்டு (01 புள்ளி)

**மொத்தப்புள்ளிகள் 15**

*[ பக். 4 ஐப் பார்க்க.*

**3.** (i) $Y$ (01 புள்ளி)

(ii) துண்டின் மேற்பரப்பளவு நாடாவை விட அதிகமாகும். (01 புள்ளி)

(iii) $0.4\,cm^3 / min$ (01 புள்ளி)

(iv) $2.2\,cm^3$ (01 புள்ளி)

(v) $Mg + 2HCl \longrightarrow MgCl_2 + H_2$ (01 புள்ளி)

(vi) $\frac{0.2}{1000} \times 100 = \frac{20}{1000} = 0.02\,mol$ (02 புள்ளிகள்)

(vii) $Mr[MgCl_2] = 24 + (35.5 \times 2) = 24 + 71 = 95$

திணிவு $= 95 \times \frac{0.02}{2} = \frac{1.90}{2} = 0.95\ g$ (01 புள்ளி)

(viii) $6.022 \times 10^{23} \times 0.01$

$6.02 \times 10^{21}$ (01 புள்ளி)

(ix) (a) அயன் பிணைப்பு (01 புள்ளி)

(b)
- அறைவெப்பநிலையில் திண்மமாகக் காணப்படும்.
- உயர் வெப்பநிலை
- உயர் உருகுநிலை
- உருகிய நிலையில் அல்லது கரைசல் நிலையில் மின்னைக் கடத்தும். (01 புள்ளி)

(x) (a) வளியின் கீழ்முகப் பெயர்ச்சி (01 புள்ளி)

(b) ஐதரசனின் அடர்த்தி வளியின் அடர்த்தியை விடக் குறைவாகும். (01 புள்ளி)

(xi) (a)
- வளியின் அடர்த்தியை விட குறைந்த அடர்த்தியைக் கொண்டது.
- தீப்பற்றக்கூடிய வாயுவாகும்.
- நீரில் சிறிதளவு கறையும்
- நிறமற்றது. (01 புள்ளி)

(b) • மாஜரின் உற்பத்தி (01 புள்ளி)

• ஐதரோக்குளோரிக்கமிலம் உற்பத்தி **மொத்தப்புள்ளிகள் 15**

**4. (A)** (i) குழாய் நீரினால் நிரம்பிக் காணப்படும். (01 புள்ளி)

(ii) (a) மாற்றமடையாது. (01 புள்ளி)

(b) அதிகரிக்கும். (01 புள்ளி)

(c) அதிகரிக்கும். (01 புள்ளி)

(iii) $P = h\rho g$ (01 புள்ளி)

(iv) $h_2 + h_3$ (02 புள்ளிகள்)

(v) திரவ அமுக்கம் : திரவயாக்கு, வாகனங்களின் தடைத்தொகுதி (01 புள்ளி)

வாயு அமுக்கம் : பானக்குழாயைப் பயன்படுத்தும்போது / சேலைன் பெற்றுக்கொடுத்தல்./ தூசி உறிஞ்சி (01 புள்ளி)

*[ பக். 5 ஐப் பார்க்க.*

**(B)** (i) 40 N (01 புள்ளி)

(ii) 20 N (01 புள்ளி)

(iii) 30 N (01 புள்ளி)

(iv) பொருளின் நிறை (01 புள்ளி)
மேலுதைப்பு (01 புள்ளி)

(v) சமனாகும். (01 புள்ளி)

**மொத்தப்புள்ளிகள் 15**

## பகுதி B - கட்டுரை வினா

**5. (A)** (i) *A* - குருதித்திரவவிழையம் வடித்தல். / உயர் வடிகட்டல்.

*B* - கலன் கோள வடிதிரவம் சிறுநீரக இடுப்பிற்குச் செல்லல்.

*C* - மீள் அகத்துறிஞ்சல் /நீர், விற்றமின், உப்பு குளுக்கோசு மீண்டும் அகத்துறிஞ்சப்படுதல். (04 புள்ளிகள்)

(ii) *D* ஐ விட *E* இன் விட்டம் குறைவாகும்./ *E* இன் விட்டத்தை விட *D* இன் விட்டம் அதிகமாகும். (*D*, *E* பதிலாக உட்காவுநாடி வெளிக்காவுநாடி என எழுதியிருந்தால் பிழையானது.) (01 புள்ளி)

(iii) (a) அகத்துறிஞ்சல் (01 புள்ளி)

(b) உயர்வடிகட்டல். (01 புள்ளி)

(c) யூரியா /யூரிக்கமிலம் /கிரியற்றின் /கிரியற்றினைன் (01 புள்ளி)

(iv) சமிபாடு அடையாத உணவின் பகுதிகள் / உயிர் இரசாயனத் தாக்கத்தின் விளைவாக அமையாது. (01 புள்ளி)

(v) (a) சிறுநீரக செயலிழப்பு (Renal faliure) (01 புள்ளி)

(b) போதுமானளவு நீர் அருந்தாமை / நாளொன்றுக்கு 3.5, 4.5 லீற்றர் நீர் அருந்த வேண்டும். (01 புள்ளி)

**(B)** (i) (a) குருதித் திரவவிழையம் (01 புள்ளி)

(b) செங்குழியம் (01 புள்ளி)

(c) இயோசிநாடி (01 புள்ளி)

(d) நிணநீர்க் குழியம் (01 புள்ளி)

(e) பிறபொருள் உற்பத்தியாக்கி (01 புள்ளி)

(ii) (a) *P* - சோணையறைச் சுருக்கம்
*QRS* - இதயவறைச் சுருக்கம்
*T* - சோணையறை / இதயவறை விரிவு (01 புள்ளி)

(b) இருகூர் வால்வு, முக்கூர் வால்வு (01 புள்ளி)

(iii) (a) 120 - சுருக்கம் (குருதியமுக்கம்)
95 - விரிவு (குருதியமுக்கம்) (02 புள்ளிகள்)

(b) உயர்குருதியமுக்கம் / உயர் அழுத்தம் (01 புள்ளி)

**மொத்தப்புள்ளிகள் 20**

*[ பக். 6 ஐப் பார்க்க.*

**6. (A)** (i) புறவெப்பத் தாக்கம் (01 புள்ளி)

(ii) நீரின் அடர்த்தி = $1\,g\,cm^{-3}$

கரைசலின் கனவளவு = $200\,cm^3$ (01 புள்ளி)

முழுத் திணிவு = $200\,g$ } (01 புள்ளி)

= $0.2\,kg$ }


(iii) $Q = m\,c\,\theta$ (01 புள்ளி)

$= 0.2\,kg \times 4200\,J\,kg^{-1}C^{-1} \times 8\,°C$ (01 புள்ளி)

$= 6720\,J$ (01 புள்ளி)

(iv) கரைசலினுள் வெப்பநிலைசீராகப் பரவுதல். போன்ற விடயங்களுக்கு (01 புள்ளி)


(v) செம்பானது வெப்பக்கடத்தியாதலால் வெப்ப இழப்பு ஏற்பட்டு வெப்பநிலை அளவீட்டில் பாதிப்பை ஏற்படுத்தும். இதன்போது இறுதி வெப்பநிலை பெற்றுக்கொள்வது கடினமானது. இதனால் கணித்தலில் பிரச்சினையாகக் காணப்படும் போன்ற விடயங்களுக்கு (01 புள்ளி)

**(B)** (i) (a)  *P* (01 புள்ளி)

(b) C அணுக்களுக்கிடையே பிணைப்பு காணப்படாது. (01 புள்ளி)

(ii) *Q* அமைப்பில் மாத்திரம் C அணுக்களுக்கிடையே (C = C) இரட்டைப் பிணைப்பு காணப்படும. (01 புள்ளி)

(iii) பொலித்தீன் (01 புள்ளி)

(iv)  (02 புள்ளிகள்)

**(C)** (i) (a) *A* (01 புள்ளி)

(b) *B* (01 புள்ளி)

(ii) $4OH^-(aq) \longrightarrow O_2(g) + 2H_2O(l) + 4e$ (02 புள்ளிகள்)

(iii) H : H (02 புள்ளிகள்)

**மொத்தப்புள்ளிகள் 20**

**7. (A)** (i) அதிகம் (01 புள்ளி)

(ii) $a \propto \frac{1}{m}$ (02 புள்ளிகள்)

(iii) $F = m\,a$ சமன்பாட்டுக்கு (01 புள்ளி)

பிரதியீட்டுக்கு (01 புள்ளி)

$a = \frac{F}{m} = \frac{60}{6} = 10\,m\,s^{-2}$ (01 புள்ளி)

(iv) அதிகரிக்கும் / நேர்மாறு விகிதசமன் (01 புள்ளி)

(v) மாற்றம் அடையாது. (01 புள்ளி)


(vi) உராய்வு விசை அதிகரிக்கும். (02 புள்ளிகள்)

*[ பக். 7 ஐப் பார்க்க.*

**(B)** (i) ஆடலோட்ட மின் (01 புள்ளி)

(ii) அரை அலைச் சீராக்கம் (01 புள்ளி)


(iii)




(01 புள்ளி)

(iv) *R*, *Y*, *P* (புள்ளி 01 × 3)

(v)




(02 புள்ளிகள்)

(vi) கொள்ளளவி (01 புள்ளி)

(vii) அரை அலைச் சீராக்கத்திற்கு உள்ளாகும். (01 புள்ளி)

**மொத்தப்புள்ளிகள் 20**

**8. (A)** (i) * கொதிக்கும் நீரில் 3 நிமிடம் அவித்தல் - கலங்களை செயலிழக்கச் செய்தல். (01 புள்ளி)

* 70% எதைல் அல்கஹோலில் மீண்டும் அவித்தல்- பச்சையத்தை அகற்றுதல் (01 புள்ளி)
(நீர்த்தாழியைப் பயன்படுத்தி) - மதுசாரம் தீப்பற்றுவதைத் தடுத்தல்/
சீராக வெப்பத்தைப் பெற்றுக்கொடுத்தல்.

* இலையை தூயநீரினால் கழுவுதல் - மேலதிக அற்கஹோலை அகற்றுதல் (01 புள்ளி)

* வெள்ளைத் தட்டில் வைத்து அயடீன் துளிகளை இடுதல். - மாப்பொருளை இனங்காணுதல் (01 புள்ளி)

(ii)
- $CO_2$ வாயு
- நீர்
- ஒளி

ஏதேனும் இரண்டிற்கு (01 புள்ளி)

(iii) $6CO_2 + 6H_2O \longrightarrow C_6H_{12}O_6 + 6O_2 \uparrow$ (01 புள்ளி)

(iv) வளிமண்டலத்தில் உள்ள $CO_2$ ஐ பச்சைத் தாவரங்கள் பெற்று $O_2$ வாயுவை வளிமண்டலத்திற்கு விடுவிப்பதால் சமநிலை பேணப்படும். (01 புள்ளி)

**(B)** (i) (a) தாவரவேர்

(b) தாவர இலை

(c) நீலக்கீழ்த் தண்டு / இரைசோம

(புள்ளி 01 × 3)

(ii)
- தாய்தாவரத்தை ஒத்த மகற்தாவரங்களைப் பெற்றுக்கொள்ளுதல்
- ஒரே தடவையில் பெருமளவான தாவரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

போன்ற விடைகளுக்கு (01 புள்ளி)

*[ பக். 8 ஐப் பார்க்க.*

**(B)** (i) வெப்பசக்தி / மின்சக்தி
பொறிமுறைச் சக்தி
போன்ற விடைகளுக்கு (02 புள்ளிகள்)

(ii) ஈர்வையிலான அழுத்தச் சக்தி = $mgh$
= $12\,kg \times 10\,m\,s^{-2} \times 7\,m$
= $840\,J$ (02 புள்ளிகள்)

(iii) அழுத்தச் சக்தி $\longrightarrow$ இயக்கச் சக்தி (02 புள்ளிகள்)

(vii) வழு = $\frac{\text{வேலை}}{\text{நேரம்}}$
= $\frac{840\,J}{40\,s}$
= $21\,J\,s^{-1}$ (02 புள்ளிகள்)

**மொத்தப்புள்ளிகள் 20**

**9. (A)** (i) $x$, $y$ அருகில் வாயுகுமிழிகள் வெளியேறுதல் (01 புள்ளி)

(ii) காபன் / காரீயம் (01 புள்ளி)
(iii) குளோரீன் / $Cl_2$ (01 புள்ளி)
(iv) $2H^+ + 2e \longrightarrow H_2$ (02 புள்ளிகள்)
(v) சோடியமைதரொட்சைட்டு / NaOH (01 புள்ளி)
(vi) செல்வாக்கு செலுத்தாது. (01 புள்ளி)
(vii) • உலோக மின்முலாமிடுதல் (01 புள்ளி)
• உலோக பிரித்தெடுப்பு (01 புள்ளி)

**(B)** (i) சமாந்தரமாக (01 புள்ளி)

(ii) மின்னோட்டம் (01 புள்ளி)

(iii) $V = IR$
$= 1 \times 2 = 2\,V$ (02 புள்ளிகள்)

(iv) மின்னோட்டம் அதிகரிக்கும் (01 புள்ளி)

(v) வோல்ற்றளவு - சமனானது. (01 புள்ளி)
மின்னோட்டம் - வேறுபடும். (01 புள்ளி)

(vi) $\frac{1}{R} = \frac{1}{R_1} + \frac{1}{R_2} + \frac{1}{R_3}$
$= \frac{1}{2} + \frac{1}{3} + \frac{1}{4}$
$\frac{1}{R} = \frac{6+4+3}{12} = \frac{13}{12}$
$R = \frac{12}{13} = 0.92\,\Omega$ (03 புள்ளிகள்)

(vii) சமாந்தரமாக இணைக்கும்போது சமானத்தடை குறையும். (01 புள்ள)

**மொத்தப்புள்ளிகள் 20**

***

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

## விஞ்ஞானம்

| கூட்டெண் : ..... | தரம் : - 11 | நேரம் : 1 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
- **தரப்பட்டுள்ள விடைகளுள் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

1) பின்வரும் முள்ளந்தண்டுளி வகுப்புகளுள் மனிதன் உள்ளடக்கப்பட்டிருக்கும் வகுப்பாக அமைவது எது?
   1. ஈரூடகவாழி 2. நகருயிர் 3. பாலூட்டி 4. ஆவேசு


2) பின்வருவனவற்றுள் ஒரு எண்ணிக் கணியமாக அமையும் கணியத்தைத் தெரிவு செய்க.
   1. இடப்பெயர்ச்சி 2. விசை 3. ஆர்முடுகல் 4. நேரம்

3) மனிதப் பெண் இனப்பெருக்கத் தொகுதியில் முளையம் உட்பதிக்கப்படும் அங்கம் எது?
   1. கருப்பை 2. சூலகம் 4. யோனி 4. பலோப்பியன் குழாய்

4) காகித நிறப்பதிவியல் முறை மூலம் பச்சையக் கரைசலின் கூறுகளை வேறாக்கும் செயன்முறையில் பச்சையக் கரைசல் குறிப்பிடப்படுவது,
   1. கரைப்பான் 2. ஆவிப்பறப்பற்ற கலவை
   3. நிலையான அவத்தை 4. மேற்கூறிய யாவும் சரி

5) தாவரங்களிலுள்ள குளோரோபில் நிறப்பொருளின் தொழிலாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   1. ஒளியை அகத்துறிஞ்சல் 2. புரதத் தொகுப்பு
   3. வாயுப் பரிமாற்றம் 4. கலச்சுவரை ஆக்குதல்

6) பின்வருவனவற்றுள் செப்புசல்பேற்று நீருடன் கொடுக்கும் நிறமாக அமைவது எது?
   1. வெள்ளை 2. இளஞ்சிவப்பு 3. நீலம் 4. கடும் ஊதா

7) 


மூக்குத்திப் பூண்டுத் தாவரத் தண்டின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றம் ஒளிநுணுக்குக் காட்டி ஒன்றினூடாக அவதானிக்கும் போது காணப்படும் வடிவம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இதில் **A, B** எனக் காட்டப்பட்டுள்ள இழையங்கள் முறையே,
   1. உரிய இழையம், காழ் இழையம்
   2. நிலையிழையம், பிரியிழையம்
   3. **A, B** இரண்டும் ஒட்டுக் கல இழையம்
   4. **A, B** இரண்டும் பிரியிழையம்

8) பின்வருவனவற்றுள் ஒரு மின்சாதனத்தின் வலுவைக் கணிப்பதற்குத் தேவையான கணியங்களைச் சரியாகக் குறிப்பிடும் தொகுதியைத் தெரிவு செய்க.

1. அழுத்த வேறுபாடும் நேரமும்
2. மின்னோட்டமும் நேரமும்
3. அழுத்த வேறுபாடும் மின்னோட்டமும்
4. தடையும் நேரமும்

9) பின்வருவனவற்றுள் அங்கிகளின் உடலில் காணப்படும் புரதங்கள் பற்றிய சரியான கூற்று எது?

1. இவை உடல் வெப்பநிலையைப் பேணுவதில் பங்கெடுக்கும்
2. கொழுப்பமிலங்கள் புரதங்களை ஆக்குகின்றன
3. வெல்லங்கள் புரதங்களின் ஒரு வகையாகும்
4. புரதம் ஒரு இயற்கைப் பல்பகுதியமாகும்

10) 


சுவரொன்றில் இழை ஒன்றினால் கட்டித் தொங்கவிடப்பட்டு சமநிலையிலுள்ள பொருளொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. **M, T** என்பவை இரு வேறு விசைகளாகும். விசைகள் **M, T** என்பவை முறையே,

1. நிறை, இழுவிசை
2. திணிவு, இழுவிசை
3. இரண்டும் இழுவிசை
4. புவியீர்ப்பு விசை, மேலுதைப்பு

11) அணு எண் 18 ஐக் கொண்ட **Ar** என்னும் மூலகத்தின் இலத்திரன் நிலையமைப்பைக் கொண்ட அயன் பின்வருவனவற்றுள் எது?

1. $Li^{+}$
2. $Cl^{-}$
3. $Be^{++}$
4. $O^{--}$

12) ஒரு மூலக்கூறு சோடியம் நைத்திரேற்று ($NaNO_3$) சேர்வையிலுள்ள நைதரசன் அணுக்களின் எண்ணிக்கை.

1. 1
2. 2
3. 5
4. $6.02 \times 10^{23}$

13) தாவரப் பூ ஒன்றிற் காணப்படும் சில இயல்புகள் தரப்பட்டுள்ளன.

**A.** தாவர உச்சியிற் பூ காணப்படுதல்
**B.** பெருமளவு மகரந்த மணிகள் காணப்படுதல்
**C.** சிறிய இலேசான மகரந்த மணிகளாக இருத்தல்

இவ்வியல்புகளைக் கொண்ட பூவில் மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்தும் காரணியாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1. விலங்கு
2. காற்று
3. நீர்
4. மேற்கூறிய யாவும் சரியானவை

14) பின்வருவனவற்றுள் பொதுவாக ஒரு பங்கீட்டுவலுப்பிணைப்பு சேர்வையின் இயல்பாக அமையும் விடையைத் தெரிவு செய்க.

1. வேறுபட்ட ஏற்றம் பெற்ற அயன்களால் உருவாக்கப்படும்
2. அறை வெப்ப நிலையில் பளிங்குருவான திண்மநிலையிற் காணப்படும்
3. பொதுவாக நீர்க்கரைசல் மின்னைக் கடத்தாது
4. உருகிய நிலையில் மின்னைக் கடத்தும்

15) பின்வருவனவற்றுள் ஓமோன்களைச் சுரக்கும் ஒரு அகஞ்சுரப்பியாக அமைவது எது?

1. கபச்சுரப்பி 2. முன்சிறுகுடல் 3. இரைப்பை 4. உமிழ்நீர்ச் சுரப்பி





16) ஐதான சல்பூரிக்கமில நீர்க்கரைசலினுள் செப்பு, நாகத்தகடுகளை வைத்துப் புறச்சுற்றினால் இணைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட மின்கலத்தில் ஒட்சியேற்றம் நடைபெறும் மின்வாயாகத் தொழிற்படுவது,

1. செப்புத் தகடு 2. நீர் 3. நாகத்தகடு 4. சல்பூரிக்கமிலக் கரைசல்

17) நேர்கோட்டுப் பாதை வழியே குறித்த ஒரு திசையில் இயங்கும் வண்டி ஒன்றின் இயக்கம் தொடர்பாகக் கூறத்தக்க விடையைத் தெரிவு செய்க.

1. அதன் கதியும் வேகமும் சமனாகக் காணப்படும்.
2. அதன் ஆர்முடுகல், அமர்முடுகல் எப்போதும் சமனானது.
3. அதன் ஆரம்ப உந்தம் இறுதி உந்தத்திற்குச் சமனானது.
4. அவ்வண்டியின் எஞ்சினால் ஏற்படுத்தப்படும் விசை மாறாது காணப்படும்.

18) சமாந்தர ஒளிக்கற்றையிலிருந்து விரிகற்றை ஒன்றைப் பெறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒளியியல் உபகரணத்தைப் பின்வருவனவற்றுள் இருந்து தெரிவு செய்க.

1. 
2. 
3. 
4. 

19) பின்வருவனவற்றுள் மீடிறன் மிகவும் கூடிய மின்காந்த அலை எது?

1. கட்புல ஒளி 2. வானொலி அலைகள்
3. காமா கதிர்கள் 4. **X** – கதிர்கள்

20) கறியுப்பு உற்பத்தியில் முதலாவது பாத்தியில் $\mathbf{CaCO_3}$ வீழ்படிவாகுவதற்கான காரணமாக அமையத்தக்கது,

1. கடல்நீரிலுள்ள ஏனைய உப்புக்களை விடவும் $\mathbf{CaCO_3}$ இனது கரைதிறன் கூட
2. கடல்நீரிலுள்ள ஏனைய உப்புக்களை விடவும் $\mathbf{CaCO_3}$ இனது கரைதிறன் குறைவு
3. கடல்நீரிலுள்ள $\mathbf{SO_4^{--}}$ அயன் ஆனது $\mathbf{CaCO_3}$ ஐ வீழ்படிவாக்குதல்
4. கடல்நீரிலுள்ள **NaCl** ஆனது $\mathbf{CaCO_3}$ ஐ வீழ்படிவாக்குதல்

21) பின்வருவனவற்றுள் வளிமண்டலத்திலுள்ள வாயுநிலை நைதரசனை மண்ணிற் பதிக்கும் செயற்பாட்டில் பேரிராச்சியம் பக்றீரியாவைச் சேர்ந்த அங்கிகள் பங்கு பற்றாத முறை எது?

1. அவரைத் தாவர வேர்ச்சிறுகணுக்களில் நைதரசன் பதிக்கப்படுதல்
2. மண்ணில் அசற்றோபக்ரர் மூலம் நைதரசன் பதிக்கப்படுதல்
3. சயனோ பக்றீரியாக்கள் மூலம் நைதரசன் பதிக்கப்படுதல்
4. மின்னல் - மழை ஏற்படும் போது நைதரசன் பதிக்கப்படுதல்.

22) $Na_2CO_3$ நீர்க்கரைசல் ஒன்றின் செறிவு $0.3 moldm^{-3}$ ஆகும். இக்கரைசலின் $2dm^3$ கனவளவில் உள்ள தூய $Na_2CO_3$ இன் திணிவு யாது? (Na - 23, C - 12, O - 16)

1. 0.6 g 2. 106g 3. 212g 4. 63.6g

23) பின்வருவனவற்றுள் இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தின் சிறப்பியல்பைத் தெரிவு செய்க.

1. ஆண், பெண் என இரு அங்கிகள் பங்களிப்புச் செய்தல்
2. புணரிகள் தோன்றுவதில்லை
3. புதிய இயல்புள்ள அங்கிகள் தோன்றுதல்
4. கூர்ப்பு ரீதியில் முன்னேற்றமடைந்த விலங்குகளில் நிகழுதல்

24) $CaCO_3$ திண்மத்தின் வெப்பப்பிரிகைக்கு உயர் வெப்பம் வழங்கப்பட வேணடும். பின்வருவனவற்றுள் இதற்கு மிகப்பெருத்தமான காரணமாக அமைவது எது?

1. குறித்த தாக்கம் ஒரு புறவெப்பத்தாக்கமாக இருத்தல்
2. குறித்த தாக்கம் ஒரு அகவெப்பத் தாக்கமாக இருத்தல்
3. $CaCO_3$ இனது வெப்பப் பிரிகைக்கு ஊக்கி பயன்படுத்தப்படுதல்
4. $CaCO_3$ இனது மாதிரியில் அது வெப்பப் பிரிகையடைவதைக் குறைக்கும் நிரோதிகள் காணப்படுதல்.

25) மனித சமிபாட்டுத் தொகுதியில் சமிபாடு முடிவடையும் பகுதி எது?

1. சிறுகுடல் 2. பெருங்குடல் 3. குதம் 4. முன்சிறுகுடல்

26) அதிகளவான இழைமணிகள் காணப்படும் இழையத்தைத் தெரிவு செய்க.

1. மேலணியிழையம் 2. குருதியிழையம் 3. தசையிழையம் 4. என்பிழையம்

27) விண்ணில் பறக்கும் வானவூர்தி ஒன்றிலுள்ள திரவமில்பாரமானியின் வாசிப்பு 102 000Pa ஆகும். இவ்வமுக்கத்தைச் சமன் செய்யத்தக்க இரசப்பாரமானியின் இரசநிரலின் உயரமாக இருக்கத்தக்கது, (இரசத்தின் அடர்த்தி $13600 kgm^{-3}$, புவியீர்ப்பு ஆர்முடுகல் $10 ms^{-2}$)

1. 0.76 m 2. 1.03 m 3. 1013 m 4. 0.75 m

28) பின்வரும் இரசாயனத் தாக்கத்தில் **X** எனக் குறிப்பிடப்படும் தாக்கி எதுவெனத் தெரிவு செய்க.

$$2\,Zn_{(s)} + X \longrightarrow 2\,ZnO_{(s)}$$


1. O 2. $O_2$ 3. $H_2O$ 4. $O_3$

29) $25^0C$ வெப்பநிலையிலுள்ள நிரம்பிய $NaCl_{(aq)}$ கரைசலின் செறிவை மேலும் அதிகரிப்பதற்குச் செய்யத்தக்க செயற்பாட்டைக் கீழுள்ளவற்றுள் இருந்து தெரிவு செய்க.

1. கரைசலைக் குளிர்த்துதல்
2. கரைசலுக்கு மேலும் நீர் சேர்த்தல்
3. கரைசலினுள் மேலும் NaCl ஐச் சேர்த்தல்
4. கரைசலை வெப்பமேற்றியவாறு மேலும் NaCl ஐச் சேர்த்தல்

30) வளியில் ஒலியின் கதி $330 ms^{-1}$ என்பதாற் கருதப்படுவது,

1. வளியில் 1s இல் ஒலியலை 330m தூரம் பயணிக்கும்
2. வளியில் 330s இல் ஒலியலை 1m தூரம் பயணிக்கும்
3. வளியில் ஒலியலையின மீடிறன் 330Hz
4. வளியில் ஒலியலையின் அலைநீளம் 330m

31) 

ஐதரோகாபன் ஒன்றின் கட்டமைப்பு சூத்திரம் அருகில் தரப்பட்டுள்ளது. அம்மூலக்கூறின் மூலக்கூற்றுச் சூத்திரத்தைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

*1.* $C_nH_{2n}$ *2.* எதிலீன் *3.* $C_2H_4$ *4.* மேற்கூறிய யாவும் சரியானவை

32) ஒளித்தொகுப்பில் மாப்பொருளை இலைகள் தொகுக்கின்றன, எனக் காட்டுவதற்குத் தேவையற்ற ஆய்வுகூட உபகரணம் பின்வருவனவற்றுள் எது?

*1.* முக்காலி *2.* பன்சன் சுடரடுப்பு *3.* முகவை *4.* புனல்

33) கீழுள்ள நிகழ்வுகளுள் மேற்காவுகை ஓட்டத்துடன் (உடன்காவுகை) / மேற்காவுகை ஓட்டத்தின் விளைவுடன் தொடர்பற்ற நிகழ்வைத் தெரிவு செய்க.

*1.* அமிழ்ப்பு வெப்பமாக்கியை நீர்கொண்ட முகவையினுள் அமிழ்த்தி வைத்து மின்னை வழங்கும்போது எடுக்கப்பட்ட நீர் முழுவதும் சூடாகுதல்

*2.* கடற்காற்று, தரைக்காற்று வீசுதல்


*3.* எரியும் சுவாலைக்கு மேலுள்ள மரத்தின் இலைகள் அசைதலும் கருகுதலும்

*4.* சுடுநீரினுள் வைக்கப்பட்ட உலோகக் கரண்டியின் கைபிடி நீருக்கு வெளியே இருப்பினும் சுடுதல்

34) இலைக்கன் ஒன்றியவாழ்வு ஈட்டத்தில் உள்ள தற்போசணி அங்கிகள் உள்ளடக்கப்படும் இராச்சியம்,


*1.* பங்கை *2.* புரோட்டீஸ்ரா *3.* பிளான்ரே *4.* பூக்காத் தாவரம்


35) பின்வருவனவற்றுள் ஒரு நேரோட்ட மின்னோட்டத்திற்கான வரைபாக அமையாத வரைபைத் தெரிவு செய்க.


*1.*



*2.*



**3.**



*4.*



36) 


படத்தில் கதோட்டுக்கதிர் அலைவு காட்டி ஒன்றின் (CRO) திரையில் பெறப்பட்ட அலை வடிவங்கள் இரண்டு தரப்பட்டுள்ளன. கீழுள்ளவற்றுள் எச்சந்தர்ப்பங்களில் அவ்வலை வடிவங்கள் முறையே பெறப்படலாம் எனத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| *1.* புல்லாங்குழலில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் | கோலொன்றை மேசையில் அடித்தல் |
| *2.* கோலொன்றை மேசையில் அடித்தல் | புல்லாங்குழலில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் |
| *3.* வீணையில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் | புல்லாங்குழலில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் |
| *4.* கோலொன்றை மேசையில் அடித்தல் | வாகனமொன்றின் எஞ்சினின் இரைச்சல் |


37) பின்வருவனவற்றுள் அழுத்தசக்தி இயக்கசக்தியாக மாற்றப்படாத சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்க.


1. ஊஞ்சல் ஆடுதல்.
2. நீர்மின்னை உற்பத்தி செய்தல்.
3. விறகைப் பிளக்க இரும்பு ஆப்பு வைக்கப்பட்டு சம்மட்டியால் அடித்தல்.
4. வெப்பம் வழங்கப்படும் போது நீர் மூலக்கூறுகள் ஆவியாகுதல்.


38)





படத்தில் எரிகுழாய் ஒன்றின் அடியில் சிறிதளவு களி (clay) ஒட்டப்பட்டு அதன் திறந்த முனையில் வளியூதப்பட்ட பலூன் கட்டப்பட்டுள்ளமை காட்டப்பட்டுள்ளது. நீர் கொண்ட முகவையினுள் அவ்வெரிகுழாய் இடப்படும்போது அதன் நிலையைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.

1 


2. 

3. 


4. 

39) திரான்சிஸ்ரர் ஒன்றைக் கொண்டு அமைக்கப்பட்ட A, B, C என்னும் மூன்று மின்சுற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. (இங்கு மின்துணைக்கூறுகளுக்கு நியமக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன) அவற்றுள் திரான்சிஸ்ரரின் விரியலாக்கித் தொழிற்பாடு பயன்படுத்தப்படாத சந்தர்ப்பம் / சந்தர்ப்பங்கள் எவை எனத் தெரிவு செய்க.


**A**




**B**




**C**



1. **A**
2. **B**
3. **C**
4. **A, B**

40) நிலையான அபிவிருத்தியைப் பாதிக்கும் நடவடிக்கையைக் கீழுள்ளவற்றுள் இருந்து தெரிவு செய்க.

1. யாதேனும் ஒரு உற்பத்திக்கான நீர் அடிச்சுவட்டை அதிகரித்தல்
2. இலத்திரனியற் கழிவின் அளவைக் குறைத்தல்
3. சுதேசிய வைத்திய விஞ்ஞானத்திற் கவனம் எடுத்தல்
4. பாரம்பரிய உணவு முறை தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.

(40X2=80 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

## விஞ்ஞானம்

| சுட்டெண் : ..... | தரம் : - 11 | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|---|

❖ இங்கே எதையும் எழுத வேண்டாம். மதிப்பீட்டுப் பணிக்கானது.

| வினா எண் - பகுதி 2 | பெற்ற புள்ளி |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| மொத்தம் | |

| | |
|---|---|
| பகுதி 1 | |
| பகுதி 2 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளி | |

### அமைப்புக் கட்டுரை வினாக்கள் - பகுதி 2 A

❖ **2 A இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளில் தரப்பட்ட இடத்தினுள்ளே விடை எழுதுக.**

1. பண்டைய காலத்தில் இலங்கை ஒரு விவசாய நாடாக விளங்கி உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருந்ததும் நீர்ப்பாசனந் தொடர்பாக அக்காலத்தியே சிறப்பான தொழிநுட்ப அறிவு பெற்றிருந்ததும் இன்றுவரை சிறப்பிக்கத்தக்க விடயங்களாக இருக்கின்றன. அதன்வழியே அண்மைக்காலப் பகுதியில் இலங்கையின் நிலையான அபிவிருத்திக்குப் பங்களிக்கும் வகையில் வடமத்திய மாகாணத்தில் மிகப்பெரிய நீர்த்தேக்கமாக **மொறகாகந்த நீர்த்தேக்க செயற்றிட்டம்** ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொறகாககந்த நீர்த்தேக்க செயற்றிட்டம் தொடர்பான சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைக்கப்பட்ட அணைக் கட்டுத் தொடர்பான அளவீடுகள் | நீரை வழங்கும் ஆறுகள் | பயனைப் பெறும் பிரதேசங்கள் | பிரதான பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் |
|---|---|---|---|
| ➢ அணைக்கட்டு கட்டப்பட்ட ஊடகம் – கொங்கிறீற்று<br>➢ அணைக்கட்டின் அகலம்–<br>○ அடிப்பகுதி – 22.5m<br>○ மேற்பகுதி – 8m<br>➢ அணைக்கட்டின் உயரம் – 65m<br>➢ தேக்கக் கூடிய நீர்க் கொள்ளளவு – 521 000 000 $m^3$ | ➢ களு கங்கை<br>➢ அம்பன் கங்கை | 1. பொலனறுவை<br>➢ அநுராதபுரம்<br>2. திருகோணமலை<br>3. மாத்தளை<br>4. குருநாகலை | ➢ நெல் வயல்களுக்கான நீர்ப்பாசனம் - பரப்பளவு – 814.2$km^2$ – இதன் மூலம் வருடாந்தம் 1.67மில்லி யன் $ வருமானம் ஈட்டுதல்<br>➢ நீர்மின்னுற்பத்தி – 25MW இதன் மூலம் மின்னுற்பத்திக்கான சுவட்டெரிபொருட் பாவனை குறைக்கப்பட்டு அதனால் வருடாந்தம் 2.49 பில்லியன் $ பணம் சேமிக்கப்படுதல்<br>➢ குடிநீர் விநியோகம்<br>➢ உள்நாட்டு மீன்பிடிக் கைத்தொழில் – இதன் மூலம் வருடாந்தம் 1.67மில்லியன் $ வருமானம் ஈட்டுதல்<br>➢ வீதி அபிவிருத்தியும், பாலம் அமைப்பும் |

❖ **மேலுள்ள தகவல்களைக் கொண்டு அடுத்துவரும் வினாக்களுக்கு விடை அளிக்க.**

**A.**

1. மேற்படி நீர்த்தேக்கத்தின் பயன்பாட்டால் உற்பத்தி செய்யப்படும் நெல் தவிர்ந்த திண்ம உணவுப்பொருள் ஒன்றை மேலுள்ள தகவல்களிலிருந்து தெரிவு செய்து குறிப்பிடுக.

.....

*(1 புள்ளி)*

2. இங்கு நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விதைநெல்லினம், பாரம்பரிய உள்ளூர் நெல்லினம் என்பவற்றுள் உள்ளூர் நெல்லினத்தைப் பயிரிடுதல் நிலையான அபிவிருத்திக்கு உகந்ததாக அமையும் எனக் கருதப்படுகிறது. அதற்கான காரணமொன்றைக் குறிப்பிடுக.

.....


*(1 புள்ளி)*

3. உணவுச்சங்கிலி ஒன்றில் (சூரியஒளியை இரசாயன சக்தியாகப் பதித்து ஏனைய அங்கிகளுக்கு உணவளிக்கும் தொழிற்பாடு காரணமாக) நெல் தாவரம் எவ்வாறு குறிப்பிடப்படும் எனக் கூறுக.

.....

*(1 புள்ளி)*

4. நீர்த்தேக்கத்தில் உள்ள உள்நாட்டு மீனினம் ஒன்றைச் சேர்ந்த அங்கிகளின் எண்ணிக்கை காலத்துடன் எவ்வாறு மாற்றமடைந்து செல்கின்றது என்பதை அருகிலுள்ள வரைபு காட்டுகின்றது. சூழலியலில் இவ்வரைபு எவ்வாறு அழைக்கப்படும்?




.....

*(1 புள்ளி)*

5. இந்த மீனினம் ஒரு ஊனுண்ணி வகையைச் சேர்ந்தது. அருகிலுள்ள சக்திக் கூம்பகத்தில் அது எத்தனையாம் போசணை மட்டத்திற்குரியதாக இருக்கும் எனக் கூறுக.




……..

*(1 புள்ளி)*

6. இப்பிரதேசத்தில் பயன்படுத்தப்படும் விவசாய இரசாயன நஞ்சுகள் இந்த மீனின் உடலில் உயிர்ச் செறிவடைவதால் ஏற்படுத்தும் பாதிப்பு ஒன்றைக் குறிப்பிடுக.

.....

*(1 புள்ளி)*

7. நீர்த்தேக்கத்தின் ஒருபகுதியில் சேதனப்பதார்த்தங்கள், விவசாய உள்ளீடுகள் அதிகளவில் சேர்ந்து பச்சை நிறப் படலம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அத்தோற்றப்பாட்டைப் பெயரிட்டு அது குடிநீர் விநியோக நடவடிக்கைகளை எங்ஙனம் பாதிக்கும் எனக் கூறுக.

தோற்றப்பாடு

.....

*(2 புள்ளிகள்)*

